திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:07, Pages:56
FEBRUARY-2026, Price Rs.20/-

பிப்ரவரி 2026,
விலை ரூ.20/-



சேரி கொலுவரோ ஈதடு ஸ்ரீதேவுடு!

(சேர்ந்து வணங்குவீர் இவரே திருமணாளன்)

- அன்னமய்யா



## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாஸமங்காபுரம்

திருப்பதிக்கு மேற்கே பத்து மைல் தூரத்தில், உலக நன்மைக்காக ஸ்ரீபத்மாவதி–ஸ்ரீநிவாசர் இன்றும் புதுமணத்தம்பதிகளாக தரிசனமளிக்கும் நித்திய கல்யாணபுரம் ஸ்ரீநிவாசமங்காபுரம். பத்மாவதித்தாயாரும் ஸ்ரீநிவாசப்பெருமானும் தங்கள் திருமணத்திற்குப் பின்னர் சிறிது காலம் இத்தலத்தில் நிவாசம் செய்தனர். தாள்ளபாக்க அன்னமய்யாவின் பேரன் சின்ன திருவெங்கலநாதன் இந்த ஆலயத்தை புணரமைத்தார். 26–04–1967 அன்று திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த ஆலயத்தை தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தது. 1981 ஆம் ஆண்டு முதல் மிகச் சிறப்பாக பிரம்மோத்சவம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இங்கு கல்யாணோத்சவத்தின் போது வழங்கப்படும் கல்யாண கங்கணத்தை திருமணம் ஆகாதவர்கள் அணிந்தால் விரைவில் திருமணம் கைக்கூடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

### பிரம்மோத்ஸவம் : 08-02-2026 முதல் 16-02-2026 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 07-02-2026 | சனி | -- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 08-02-2026 | ஞாயிறு | திருச்சி உத்ஸவம், துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 09-02-2026 | திங்கள் | சிறிய சேஷவாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 10-02-2026 | செவ்வாய் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 11-02-2026 | புதன் | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 12-02-2026 | வியாழன் | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 13-02-2026 | வெள்ளி | ஹனுமத் வாகனம், மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 14-02-2026 | சனி | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 15-02-2026 | ஞாயிறு | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 16-02-2026 | திங்கள் | தீர்த்தவாரி, பல்லக்கு உத்ஸவம் அவப்ருதோத்ஸவம், சக்கரஸ்நானம் | திருச்சி உற்சவம் துவஜாவரோஹணம் |



அத$_2$ சேத்த்வமிமம் த$_4$ர்ம்யம் ஸங்க்$_3$ராமம் ந கரிஷ்யஸி
தத: ஸ்வத$_3$ர்மம் கீர்திம் ச ஹித்வா பாபமவாப்ஸ்யஸி||

இந்த தர்மத்தோடு கூடிய யுத்தத்தை நீ
செய்யவில்லையானால், அப்போது ஸ்வதர்மத்தையும்
புகழையும் இழந்து பாவத்தை அடைவாய்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–33*

மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண்கூடியபின்
பழியைக் கடத்தும் இராமாநுசன் புகழ்பாடியல்லா
வழியைக் கடத்தல் எனக்கினியாதும் வருத்தமன்றே

*நம் வாக்கினால் சொல்லி முடிக்கமுடியாத புகழை உடையவர் ஸ்வாமி ஸ்ரீகூரத்தாழ்வான். முக்குறும்புகளையும் அறுத்தவர் கூரத்தாழ்வான். நான் சென்று கூரத்தாழ்வானின் திருவடிகளைப் பற்றியபின் இராமாநுசர் என்னுடைய பழிகளைப் போக்குகிறார். எனக்கு இனி வருத்தமில்லை என்று திருவரங்கத்தமுதனார் விளக்குகிறார். இதற்கு முன் பாசுரத்தில், அமுதனார், "என்னுடைய மதியின்மையால் இராமாநுசரின் புகழைப் பாட ஆரம்பித்தேன். இது சாத்தியமில்லை" என்று பயந்தவர், இந்தப் பாசுரத்தில், "ஆழ்வான் திருவடியைப் பற்றிய எனக்கு இனி வருத்தம் இல்லை" என்கிறார்.*

*– இராமாநுச நூற்றந்தாதி (7)*








திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- **"ஸப்தகிரி"** திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- **"ஸப்தகிரி"** இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/–, ஆயுள் சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/–
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஒ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- **"ஸப்தகிரி"** சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- **"ஸப்தகிரி"** இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

**மேலும் தகவல்களுக்கு :**
**0877- 2264543, 2264359**

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2026

மலர் 05 இதழ் 07



சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
**0877- 2264543, 2264359**
**பிரதான ஆசிரியர் : 2264363**

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
editorsapthagiri@gmail.com

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்

## உள்ளுறை

பக்கம்

நித்ய சூரிகளை விட சிறப்புடைய திருமழிசை ஆழ்வார் 7
-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.

உன் பவளவாய் காண்பேனே... -திரு.ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. 10

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : அனசூயாதேவி 13
- திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.

திருநெடுங்குன்றம் கல்வெட்டுக்கள்- பேராசிரியர் ஜி.நரசிம்மன், அனந்தபுரம். 16

ஆரோக்கியம் காப்போம் : பாதையும் பயணமும் 18
-ஆயுர்வேத மருத்துவர் டாக்டர் கி.ஐ.நிகிலா வெங்கட், கோவை.

அருளாளனுக்கு ஆலவட்ட கைங்கர்யம் 20
-திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை.

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: மால்நந்தி 23
-படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை.

சூரியனைக் காத்த நிழல் 24
-முனைவர் உ.வே. அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்யர் சுவாமி, சென்னை.

சிவராத்திரியும் திருவாசகமும் -முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை. 31

தைப்பூசத் திருவிழா - புலவர் க.சுகுமாரன், மன்னார்குடி. 34

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 37

108 திவ்வியதேச வைபவம் : திருசிங்கவேள்குன்றம் 39
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: முதலியாண்டான் 42
-ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை.

குலசேகர ஆழ்வாரின் ராம பக்தி - திரு. எஸ்.சுதர்சனம், நங்கைநல்லூர் . 44

ராசிபலன்கள் : பிப்ரவரி 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். 47

நீதிக்கதை : நன்றி செலுத்த வேண்டும் -திரு.எஸ்.இராமதாஸ், புதுச்சேரி. 48

சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி 49

சித்திரக்கதை : தாய்க்கு தலை வணங்கு 52

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : *உபயதேவியருடன் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.*

பின்னட்டை : *குலசேகர ஆழ்வார் (சித்திரம் – திரு.ஜெகதீஷ்)*





# பரமானந்தத்திற்கு பரம சிவ வழிபாடு

இறைவன் ஒருவனே எனும் வலுவான உணர்வானது நமது சனாதன தர்மத்தில் பண்டைய காலம் தொட்டு இருந்து வருகிறது. ஒரு தங்கமானது பல்வேறு ஆபரணங்களாக ஆகுவது போன்று, அந்த ஒரு இறைவனே வெவ்வேறு வடிவங்களில் வழிபடப்பட்டு வருகின்றார் எனும் தெளிவான விளக்கம் நமது சனாதன தர்மத்தில் உள்ளது. எத்தனை ஆபரணங்களைக் கண்டாலும் அவை யாவும் தங்கத்தின் வடிவமே ஆகும் என நாம் உணர்வது போன்றுதான் வெவ்வேறு திருநாமங்களும் வடிவங்களும் ஒரே பரமாத்மாவின் வெளிப்பாடுதான் என்பதை நாம் அறிவோம். வழிபடும் முறையில் சிறிது வேறுபாடு இருக்கலாம். ஆனால், இறைவன் ஒருவரே ஆவார். உபாசனைத் திறன் பெற்றவர்கள் மந்திரங்கள் வாயிலாக வழிபட, நிர்ணய தத்துவம் அறிந்த யோகிகள் நிர்ணயத்தின் மூலமாக தங்களுக்குள்ளேயே இறைவனைக் கண்டு கொள்வர். பண்டிதர்கள் தங்களின் கீர்த்தனைகளின் மூலமாக வழிபட, சாதாரண பக்தர்களோ தாங்கள் அறிந்த வழியில் வழிபடுவர். அருள் தந்திடும் இறைவன் அனைவருக்குமானவர். இதுதான் நம் சனாதன தர்மத்தின் அடிப்படை வடிவமுமாகும்.

ஹிமவந்தம் முதல் சேதுவரை ஜோதி லிங்கங்களாகப் பிரகாசித்து அருள்புரிந்து வரும் சிவபெருமான் வேத பண்டிதர்களின் ருத்ர அபிஷேகங்களில் மட்டுமல்லாமல் சாதாரண பக்தர்களால் வழங்கப்படும் நீர் ஆதாரங்களிலும் மயங்குகின்றார். அவர்களின் “பம்பம்... போலே”, “ஹரஹர மகதேவா” மந்திரங்களில் மயங்குகிறார். சிலந்தி, பாம்பு மற்றும் யானைக்கு முக்தி அளித்த காளஹஸ்தி ஈஸ்வரன் பக்த கண்ணப்பனுக்கும், நந்தனாருக்கு அருள் புரிந்த தில்லை அம்பலவானனும் அவர்களின் குறைவற்ற பக்திக்கு கைவல்ய பட்டினம் அருளினர்.

பண்டிதர்கள் முதற்கொண்டு சாதாரண பக்தர்கள் வரை, யோகிகள் முதற்கொண்டு உழைப்பவர்கள் வரை, வேத விற்பனர்கள் முதற்கொண்டு ஏழைகள் வரை என ஆயிரக்கணக்கான கிளைகளைக் கொண்ட மிகப் பெரிய ஒற்றை மரமாக வீற்றிருக்கும் சனாதன தர்ம உணர்வு அனைத்து வகையான மனநிலைகளுக்கும், பல்வேறு நலன்களுக்கும் ஏற்றவாறு மக்களிடையே வளர்ந்துள்ளது. இந்தப் பன்முகத் தன்மையின் காரணமாகவே அனைவரும் பாராட்டுகின்றார்கள். தெய்வீகத்தை உயர்த்துவதோடு நமது கலாச்சாரத்தையும் அங்குக் காட்டப்படுகிறது. இறைவனானவன் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்திருப்பதை யோகிகள் காண்கிறார்கள்.

பரமாத்மாவானவர் மிக அழகிய வடிவமாக இருப்பதோடு மட்டுமின்றி ஒரு அவதாரமாக நம்மோடு திருவிளையாடல்களைப் புரிந்தும் வருகின்றார். இதனை அவரின் அடியவர்களான நாயன்மார்களின் வரலாற்றின் மூலம் நாம் நன்கு அறியலாம்.

சிவ வழிபாடு என்பது பக்திக்கும், ஆத்ம சுத்திக்கும், உலக நலனுக்குமான வழிபாடு ஆகும். சிவ வழிபாட்டிற்கு பக்தி, ஞானம், வைராக்கியம், சேவை மனப்பான்மை என அனைத்தும் ஒருங்கிணைந்து இருக்கும். சிவ வழிபாட்டில் பயன்படுத்தப்படும் வில்வம், கங்கை நீர், பால், தேன், தீப தூபங்கள் மற்றும் பிற பொருட்கள் வழிபடுவோரின் மனதைத் தூய்மைப்படுத்துகிறது.

மகாசிவராத்திரி அன்று லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வது மிகப் புனிதமானதாகும். சிவன் நல்லிணக்கத்தின் சின்னம். அவரிடம் மென்மை, இரக்கம் மற்றும் நீதி அனைத்தும் இணைந்துள்ளன. அனைத்து உயிரினங்களையும் சமமாகவே பாவிக்கின்றார். சிவபெருமானை நினைவு கூறுவது என்பது அடிமுடி காண இயலாத அருட்பெருஞ்சோதியை நினைவு கூறுவதாகும்.

சிவனின் இன்னருள் கிடைத்திடுமாயின் மறுபிறவி என்பது இருக்காது. சிவ வழிபாட்டின் வாயிலாக பக்தி, கருணை, மன்னிக்கும் குணம், நீதி மற்றும் தியாகம் எனும் நல்ல எண்ணங்கள் இதயத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும். சிவன் அருளால் வெற்றி மட்டுமல்ல ஆன்மீகச் சிகரங்களையும் அடைய முடியும். சிவ வழிபாடு என்பது பக்தியின் உச்சம் மற்றும் வாழ்க்கையில் பரமானந்தமும் ஆகும்.

# நித்ய சூரிகளை விட சிறப்புடைய திருமழிசை ஆழ்வார்

தை மாதமும் மாசி மாதமும் கலந்ததுதான் பிப்ரவரி மாதம். தை மாதத்தில் மக நட்சத்திரம் சிறப்புடையது. அந்நட்சத்திரத்தில் தான் திருமழிசை ஆழ்வார் அவதாரம் செய்தார்.

*தையில் மகம் இன்று  தாரணியீர் ஏற்றம்*
*இந்தத்*
*தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன் துய்ய*
*மதி*
*பெற்ற மழிசைப் பிரான் பிறந்த நாள் என்று*
*நற்றவர்கள் கொண்டாடும் நாள்*

திருமழிசை ஆழ்வார் திருவேங்கடமுடையான் விஷயமாக பல பாசுரங்களை இயற்றி இருக்கின்றார். அப்பாசுரங்களில் ஒன்றை திருவேங்கட முடையான் விஷயமாக அனுபவிப்போம். நான்முகன் திருவந்தாதியிலே ஓர் அற்புதமான கருத்தை வெளியிடுகின்றார்.

1. யார் நித்தியசூரிகளாக, பரமபதத்தில் இருக்க முடியும்?
2. அப்படி இருப்பவர்களுடைய குணம் என்ன?
3. அவர்கள் அந்த நிலையை எப்படி அடைந்தார்கள்?

இந்த விஷயங்களை ஆராய்ந்து சொல்லிவிட்டு அந்த நிலையை விட மேம்பட்ட நிலை ஏதாவது இருக்கிறதா என்பதையும் ஒரு கேள்வியாக வைத்து விடை சொல்வது போல் பாசுரமிடுகின்றார்.

முதலில் பாசுரத்தைப் பார்ப்போம்.

*வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார்,*
*வேங்கடத்தான்*
*பால்திருந்த வைத்தாரே பன்மலர்கள்,*
*மேல்திருந்த*
*வாழ்வார் வருமதிபார்த் தன்பினராய்,*
*மற்றவர்க்கே*
*தாழ்வா யிருப்பார் தமர்*     – நான்முகன் திரு.90

எல்லோருக்கும் பரமபதம் செல்ல வேண்டும் என்பது ஆசை. வைகுண்டத்தில் வாழ்பவர்களை நித்யசூரிகள் என்று அழைப்பார்கள்.

அவர்கள் நித்ய நிரதிசய பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டு எம்பெருமானை சதாசர்வ காலமும் ஸதாபஸ்யந்தி என்று வேதம் சொல்லும்படி சாம கானமிசைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அந்த வாழ்க்கை அவர்களுக்கு எப்படி கிடைத்தது?



– பேராசிரியர்
எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

*''வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார், வேங்கடத்தான் பால்திருந்த வைத்தாரே பன்மலர்கள்''* என்று முதல் இரண்டு வரிகளிலே திருமழிசை ஆழ்வார் விடை சொல்கிறார். பரமபதத்தில் இன்று வீற்றிருந்து ஆள்பவர்கள் ஒரு காலத்திலே திருவேங்கடமுடையான் திருவடிகளிலே பல வகைப்பட்ட வாசனை மலர்களாலே பகவானை ஆராதித்தவர்கள்.

இப்பொழுது நமக்கு ஒரு விஷயம் பளிச்சென விளங்கி விடுகிறது.

நம்மாழ்வார் *''வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே''* என்று விதித்து விட்டார். அவ்வாய்ப்பு மனிதர்களாகப் பிறந்த நமக்குத்தான் கிடைத்து இருக்கிறது. மனிதர்களாகப் பிறந்த நாம் புனிதர்களாக மாறி புண்ணிய உலகமான பரமபதத்தில் சென்று நிறைவாழ்வு வாழ்வதற்கு ஒரே ஒரு காரியத்தைத்தான் செய்ய வேண்டும்.

திருமலையிலே புஷ்பங்கள் பூத்துக் கிடக்கின்றன. அப்புஷ்பங்களை மாலையாக்கி திருவேங்கடமுடையானுக்குச் சமர்ப்பித்து ஆராதனை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் விண்ணாடு (பரமபதம்) ஆளும் வாய்ப்பைப் பெறுவது உறுதி.

இதைத்தான் ஆண்டாள் திருப்பாவையில் *''தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்''* என்று பாடி இருக்கின்றார்.

நம்மாழ்வார் திருவேங்கடம் விஷயமாக ஒரு பாசுரத்தை அருளிச் செய்கின்றார்.

*எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும்*
*முந்தை, வானவர் வானவர் கோனொடும்,*
*சிந்து பூ மகிழும் திருவேங்கடத்து,*
*அந்தம் இல் புகழ்க் கார் எழில் அண்ணலே*

திருநாட்டிலே சென்று எம்பெருமானுக்கு அடிமை செய்வதன்றோ எல்லார்க்கும் ஸ்வரூபம்; அப்படியிருக்க, நீர் இந்நிலத்தில் திருமலையிலே அடிமை செய்ய விரும்புவது ஏன் என்ன; திருநாட்டிலுள்ள நித்யமுக்தர்களுங்கூட இத்திருமலையிலே வந்து அடிமைசெய்யக் காண்கையாலே நானும் இங்கே அடிமை செய்யக் குறையென்? என்கிறார் நம்மாழ்வார்.

கானமும் வானரமுமான இவற்றுக்கு முகங் கொடுத்துக் கொண்டு நிற்கிற வேங்கடமுடையானின் ஸௌசீல்ய குணத்தை அநுஸந்தித்து ஈடுபட்டவர்களாய், ஸ்ரீஸேநாபதி ஆழ்வான் தொடக்கமான நித்தியசூரிகள் திருவேங்கடமுடையானை ஸேவிக்க விரும்பி, திவ்ய புஷ்பங்களையெடுத்துக் கொண்டு இங்கே வருகிறார்கள்;

எனவே, திருவேங்கடமுடையானுக்கு மிகச் சிறந்த கைங்கரியம் புஷ்ப கைங்கர்யமே. எத்தனை எளிதான வழிபாடு இந்த வழிபாடு பாருங்கள்.

இங்கே மிக முக்கிய வழிபாடாக மலர் வழிபாடு இருப்பதால்தான் திருமலைக்கு வருகின்றவர் எத்தனை பெரிய முக்கியஸ்தர்களாய் இருந்தாலும் மலர் மாலையைச் சூட்டுகின்ற வழக்கமில்லை. அங்கே செல்பவர்களும் தங்கள் தலைகளிலே பூக்களைச் சூடிக் கொள்கின்ற வழக்கமில்லை. காரணம் இவைகள் எல்லாம் எம்பெருமானுக்கே உரியவை

ஆண்டாள் நாச்சியார் பாமாலை பாடி கொடுத்தாள். ஆனால் பூமாலையைச் சூடிக் கொடுத்து அந்த வேங்கடவனை தனக்கு உரியவனாக ஏற்றுக் கொள்ளும்படி செய்தாள். *''வேங்கடவற்கு என்னை விதி''* என்பது அவளுடைய வாக்கு

திருமழிசை ஆழ்வார் முதல் இரண்டு வரிகளிலே நித்திய சூரிகளாக பரமபதம் ஆள்வதற்கு மலர்மாலை கைங்கரியம் முக்கியம் என்பதைச் சொல்லிவிட்டார்.

சரி, அந்த நித்திய சூரிகளை விடப் பெருமையான ஒரு விஷயம் ஏதாவது இருக்கிறதா என்பதை அடுத்த இரண்டு வரிகளிலே ஆராய்ந்து சொல்லுகின்றார். திருவேங்கடமுடையான் அடியார்கள் யாரோ, அவர்களுக்கு அடியாராக யார் இருக்கின்றார்களோ, அவர்கள் நித்தியசூரிகளை விட விலக்ஷணராக வாழ்பவர்கள் என்பதை, *''மேல்திருந்த வாழ்வார் வருமதி பார்த்தன்பினராய், மற்றவர்க்கே தாழாயிருப்பார் தமர்''* என்று சாதிக்கின்றார்.

எம்பெருமான் அடியார்கள் என்பது முதல் நிலை (பிரதம நிலை). எம்பெருமான் அடியார்க்கு அடியார்கள் என்பது சரம நிலை.

முதல் நிலையை விட இரண்டாவது நிலை உயர்ந்தது. முதல் நிலை எம்பெருமானுக்கு

அடியாராக அவனுக்கு புஷ்ப கைங்கரியம் செய்வது. இரண்டாவதாக அப்படி செய்யும் அடியார்களுக்குக் கைங்கரியம் செய்வது. இராமாயணத்திலே லட்சுமணன் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை இராமனுக்குச் செய்தான். அதனால் லக்ஷ்மீ சம்பந்நனாக விளங்கினான்.

ஆனால், அவனை விட ஒரு படி ஏற்றம் பரதனுக்குச் சொல்லுவர். அவன் இராமனின் மனதை அறிந்து அவனிட்ட வழக்காக இருந்தான். பரதனுக்கு அடியாராக விளங்கியவன் சத்துருக்கனன்.

வைணவ மரபிலே சத்துருக்கனனுக்கு மிகப் பெரிய ஏற்றம். மதுரகவியாழ்வாரைப் போலே தேவு மற்றறியேன் என்று இருந்தவன் சத்துருக்கனன். இந்த நிலைதான் அடியார்க்கு அடியார் என்கிற நிலை.

இதைத்தான் வைணவத்தின் நிறைவு நிலை (சரம பர்வ நிஷ்டை) என்று சொல்வார்கள்.

*''அடியார் அடியார் தம் அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே''* என்று நம்மாழ்வார் இந்த சரம நிலையை பாசுரம் இடுகின்றார். தொண்டரடிப்பொடி ஆழ்வார் தமது திருப்பள்ளி எழுச்சி பிரபந்தத்தின் கடைசி வரியில் பகவானிடத்திலே ஒரு வேண்டுகோள் வைக்கிறார்

உன்னுடைய அடியார்க்கு அடியாராக என்னை நீ ஆட்கொள்ள வேண்டும். திருப்பள்ளி எழுச்சியின் ***''தொடையத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்ட ரடிப்பொடி யென்னும் அடியனை, அளியன் என் றருளி உன்னடியார்க்கு ஆட்படுத் தாய்!''*** என்ற கடைசி வரியைக் கவனித்தால் நமக்கு இந்த விஷயம் புரியும்.

திருமந்திரத்தினுடைய சிறப்பான அர்த்தமும் இதுதான். இதை திருக்கண்ணபுரம் பாசுரத்தில் திருமங்கை ஆழ்வார் *''மற்றெல்லாம் பேசினும் உற்றதும் உன் அடியார்க்கடிமை''* என்று அற்புதமாகச் சாதிக்கிறார்.

என்னதான் திருமந்திரத்திற்கு ஆயிரம் ஆயிரம் விளக்கங்கள் அளித்தாலும் அவைகளின் சாரமாக விளங்குவது பகவானின் அடியார்க்கு அடியாராய் விளங்குகின்ற தன்மை தான் என்று ஆணித்தரமாக சாதிக்கிறார்.

அதைத்தான் திருமழிசை ஆழ்வார் இந்தப் பாசுரத்திலே முதல் இரண்டு அடிகளாலே திருவேங்கடமுடையானுக்கு மலர் கைங்கரியம் செய்பவர்கள் நித்யசூரிகளாகத் திகழ்வார்கள் என்று சொல்லிவிட்டு, திருவேங்கட முடையான் உளமகிழ, அவனுக்கு கைங்கரியம் செய்யக்கூடிய பக்தர் களுக்கு அடிமைப்பட்டவர்கள் மேலே சொல்லப் பட்ட நித்தியசூரிகளைக் காட்டிலும் சிறப்பானவர்க ளாக வாழ்வார்கள் என்று சொல்லி பாசுரத்தை நிறைவு செய்கின்றார்.

இந்தப் பாசுரத்தின் மூலமாக திருவேங்கட முடையானுக்கு எப்படிப்பட்ட கைங்கரியம் செய்ய வேண்டும் என்பதையும், அந்தக் கைங்கரியம் செய் கின்ற அடியார்களுக்கு எப்படிப்பட்ட கைங்கரியம் செய்ய வேண்டும் என்பதையும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றார் .

திருமழிசை ஆழ்வார் காட்டியபடி வேங்கடமுடையானுக்கு மலர் கைங்கரியங்களைச் செய்வோம். அப்படி மலர்த் தொண்டு செய்கின்ற அடியார்களுக்கும் தொண்டு செய்து உய்வு பெறுவோம்.



**திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்**

**ஒவ்வொரு வருடமும் பங்குனி (தெலுங்கு அதிக மாதம் வரும் போது மாசி) மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசி முதல் பௌர்ணமி (மார்ச்–ஏப்ரல் மாதங்க ளில் வரும்) வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு தெப்போத்ஸவம் நடைபெறும். தெப்போத்ஸவத் தில் கீழ்க்கண்டவாறு இறை மூர்த்திகளை எழுந்தருளச் செய்வர்.**

| | | |
|---|---|---|
| 26-02-2026 | வியாழன் | ஸ்ரீகோதண்டராமஸ்வாமி |
| 27-02-2026 | வெள்ளி | ஸ்ரீகிருஷ்ணர் |
| 28-02-2026 | சனி | திருமலையப்ப ஸ்வாமி |
| 01-03-2026 | ஞாயிறு | திருமலையப்ப ஸ்வாமி |
| 02-03-2026 | திங்கள் | திருமலையப்ப ஸ்வாமி |

# உன் பவளவாய் காண்பேனே...

ஸ்ரீ:யபதியான ஸ்ரீமந்நாராயணன் பூலோகத்தில் உள்ள ஜீவாத்மாக்கள் அனைவரும் உய்வடையும் பொருட்டு பரமபதத்தில் இருந்து இறங்கி வந்து அர்ச்சாவதாரமாய் திவ்யதேசங்களில் எழுந்தருளி சேவை சாதிக்க திருவுள்ளம் கொள்கையில் எம்பெருமான் பூலோகத்தில் முதலில் தம்முடைய தாமரையன்ன திருவடிகளைப் பதித்தது வேங்கட மலையாகும். திருவேங்கடமுடையான் ஆழ்வார்களுக்கு தம்முடைய ஸ்வரூப, ரூப திருக்கல்யாண குணங்களையும், ராம கிருஷ்ணாதி விபவ அவதார லீலைகள், சேஷ்டிதங்கள் மற்றும் எண்ணிறைந்த வைபவங்களையும் காட்டியருளினான்.

திருவேங்கடவனின் திருமேனியழகினையும், அவதார லீலைகளையும் ஆனந்தமாக அனுபவிக்கும் ஆழ்வார்களுக்கு திருவேங்கடமுடையானின் திருவாயின் அழகும், அனுபவத்திற்கு விஷயமாக அவனின் எழில்மிகுந்த திருவாயின் மேன்மை குறித்து பவளவாய், செங்கனிவாய் என அனுபவித்து பாசுரங்கள் இயற்றி மகிழ்ந்துள்ளனர்.



**பவளவாய் :**

*செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!*
*நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்*
*அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே*

திருமலை திவ்யதேசத்து திருவேங்கடமுடையான் அகலகில்லேன் இறையுமென்ற பெரியபிராட்டி ஒருகணமும் விட்டுப் பிரிந்திருக்க முடியாதபடிக்கு தம்முடைய திருமார்பிலே வீற்றிருக்கச் செய்து அடியார்களின் ஜீவாத்மாவோடு நீக்க முடியாத புதர்ச் செடியாய் வேர் பிடித்து வளர்ந்திருக்கும் முற்பிறவி, இப்பிறவி சார்ந்த கொடிய பாபங்களை வேரோடு பிடுங்கி எரிந்து அருளும் விதமாக மிகவும் வாத்ஸல்யத்துடன் கம்பீரமாக நெடிதுயர்ந்த திருமேனியினைக் கொண்டவனாய் சேவை சாதிக்கிறான். அப்பெருமாளைத் தரிசித்து பேறு பெரும் பொருட்டு விண்ணுலக தேவர்களும், தேவதைகளும், பூலோக அடியார்களும் திருமலைக்கு வந்து திருக்கோயிலினுள் நுழைந்து, ஆனந்த விமான நிலையத்தின் கருவறையின் படிகளின் வழி சென்று திருவேங்கடமுடையானை சேவித்து அருள் பெற்ற வண்ணம் உள்ளனர்.கோயிலுக்கு வந்தவர்கள் பெருமாளை சேவித்தவுடன் வெளியேறி அவர்தம் இருப்பிடம் சென்றுவிடுவர். அவ்வாறில்லாமல் அசித்தான கல்லினால் ஆன கருவறையின் படியாக கீழே கிடந்து திருவேங்கடமுடையானின் பவளம் போன்ற சிவந்த அதரங்களை இடை வீடின்றி எப்பொழுதும் எக்காலமும் சேவித்திருக்க அருள் செய்ய பிரார்த்திக்கிறார் குலசேகராழ்வார்.

**பேயார் முலையுண்ட வாயான் :**

*பள்ளியாவது பாற்கடலரங்கம் இரங்கவன் பேய்முலை,*
*பிள்ளையாயுயிருண்ட வெந்தை பிரானவன் பெருகுமிடம்,*


**திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி,**
**94438 79592**

*வெள்ளியான் கரியான் மணிநிறவண்ண*
*னென்றெண்ணி, நாள்தொறும்*
*தெள்ளியார் வணங்கும்மலை திருவேங்கடம்*
*அடை நெஞ்சமே.*

திருப்பாற்கடலில் க்ஷீராப்திநாதனாய் சயனித்து இருந்த எம்பெருமான் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் எடுத்து திருவாய்ப்பாடியில் வளருகையில் பூதனை எனும் பேய் வடிவம் கொண்ட அரக்கியானவள் கம்சனின் கட்டளையின்படி கண்ணனைக் கொல்வதற்காக தாய் வேடமிட்டு யசோதை இல்லத்தில் புகுந்து குழந்தை கண்ணனை கையினால் எடுத்து மடியினில் கிடத்தி பாலூட்ட தம்முடைய முலையினை கண்ணனின் திருவாயினுள் வைத்திடும் போது கண்ணன் தம்முடைய திருவாயின் மூலம் அப்பேய் மகளின் உயிரினை முற்ற உறிஞ்சி கொன்று சம்ஹாரம் செய்தான்.

அவனே அர்ச்சாவதாரத்தில் திருவரங்கத்திலே ஆதிசேஷன் படுக்கையிலே போக சயனத்தில் சேவை சாதிக்கிறான். திரேதாயுகத்தில் வெண்மை நிறத்துடனும், துவாபரயுகத்தில் நீல நிறத் திருமேனியுடனும், கலியுகத்தில் கருத்த நிறமுடனும் திருக்காட்சி தந்தருளும் எம்பெருமான் என வேதம் வல்லார்கள் நாள்தோறும் போற்றி வணங்கித் துதிக்கும் திருவேங்கடவனை அடைந்து உய்வடையுமாறு தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்துகிறார் திருமங்கை ஆழ்வார்.

*மேயான் வேங்கடம் காயா மலர்வண்ணன்*
*பேயார் முலையுண்ட வாயான் மாதவனே.*

**உலகம் உண்ட வாய் :**

*நீரார்க்கடலும் நிலனும்முழுதுண்டு,*
*ஏராலமிளந்தளிர்மேல் துயிலெந்தாய்!,*
*சீரார் திருவேங்கடமாமலைமேய,*
*ஆராவமுதே!அடியேற்கருளாயே!*

நீரால் சூழப்பட்ட கடலினையும் நிலத்தினையும் முற்றிலும் முழுவதுமாக உண்டு அழகிய ஆலமரத்தின் இலந்தளிர்மேல் கள்ள நித்திரை கொண்ட எம்பெருமானே திருவேங்கடமலையில் சேவை சாதித்தருள்கிறான். ஆராவமுதமாய் அவனைச் சரணமெனப் பற்றின அடியாரான தமக்கு அருள்புரிய திருவுள்ளம் பற்றவேண்டுமென திருமங்கையாழ்வார் பிரார்த்தனை செய்கிறார்.

**வெண்ணெய் உண்ட வாய் :**

*ஆங்கு வெந்நர கத்தழுந் தும்போ தஞ்சே*
*லென்றடி யேனையங் கேவந்து*
*தாங்கு,தாமரை யன்னபொன் னாரடி*
*எம்பி ரானை உம் பர்க்கணி யாய்நின்ற,*
*வேங்கடத்தரி யைப்பரி கீறியை வெண்ணெ*
*யுண்டுர லினிடை யாப்புண்ட*
*தீங்க ரும்பினை, தேனைநன் பாலினை அன்றி*
*யென்மனம் சிந்தைசெய் யாதே.*

## ஔடதம் குறை

**புதிய ஆத்திசூடி 12**



ஔடதம் என்றால் மருந்து. மருந்து உண்பதைக் குறைத்துக் கொண்டு, இயற்கை உணவை அதிகம் உட்கொண்டு, தேவையான அளவு தண்ணீர் குடித்து, சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டும். இதுவே பாரதி சொல்லும் "ஔடதம் குறை" என்பதின் தாத்பர்யம் ஆகும். நமது உடலானது, பஞ்சபூதங்களால் ஆனது. அந்த பஞ்சபூதங்களின் சமநிலை சேர்க்கை மாறுபட்டால், தம் உடல் நலம் குன்றி, நம் உடலே மருத்துவ ஆராய்ச்சிக் கூடமாக மாறிவிடும். அதனால்தான் குழந்தைகளிலிருந்தே ஆரோக்யம் தொடங்க வேண்டும். உடற்பயிற்சி அவசியம் என்பதற்காகவே, "ஓடி விளையாடு பாப்பா-நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்று உடற்கல்வி, உடற்பயிற்சியின் அவசியத்தை எடுத்துக் கூறுகிறார்.

அதனால்தான் உடல் வலிவும், மன வலிவும் ஏற்படும் என்று உறுதியாகக் கூறுகிறார். நாம் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருப்பவர்கள். அதனால் தேவைப்படும் போதெல்லாம் அதாவது நன்கு பசிக்கும் போதெல்லாம் நல்ல உணவு, சுத்தமான தண்ணீர், மாசற்ற காற்று அதோடு உடற்பயிற்சியின் அவசியத்தையும் சேர்த்துச் சொல்கிறார். இவையெல்லாம் நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ளும் வழிமுறைகள். அப்படியே நோய்கள் வந்தாலும் அதை எதிர்க்கும் வலிமை நம் உடலுக்கு வேண்டும். பச்சைக் காய்கறிகள், கீரைகள், புரதம் நிறைந்த பருப்பு வகைகள், பால் இவற்றின் மூலம் நாம் நம் உடலின் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளலாம்.

நம் உடலையும், வீட்டையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டாலே, "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிப்ப வாய் நாடி வாய்ப்பச் செயல்"என்ற வள்ளுவர் கூற்றை மெய்ப்பித்து ஆரோக்யமாக மருந்தைக் குறைத்து வாழுங்கள் குழந்தைகளே என்கிறார் பாரதி.

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938

அண்டங்கள் அனைத்திற்கும் அணிகலன் போன்ற திருமலையில் சேவை சாதிக்கும் சிங்கம் போன்ற திருவேங்கடமுடையானின் திருவடிகள் பொன்னின் நிறம்பெற்று ஒளிர்ந்தும், தாமரையின் மென்மை பெற்றும் மிளிர்கின்றன. கொடிய தீவினை களின் காரணமாக கொதிக்கும் நரக வாழ்வு நிச்சய மானபோது அத்திருவடிகளை அடியார் களைத் தஞ்சமெனப் பற்ற வைத்து அச்சங்களை நீக்கி கொடிய நரக வாழ்விலிருந்து மீட்டு எம்பெருமான் அவர்களைக் காத்தருளினான். கம்சனால் ஏவப்பட்ட குதிரையின் வடிவில் வந்த அசுரனைக் கொன்றவனும், உறியில் வைத்த வெண்ணையினைக் களவாடியுண்டதற்காக தாய் யசோதையினால் இடுப்பில் கயிற்றினால் கட்டப் பட்டு உரலோடு சேர்த்துக் கட்டப்பட்டு சேஷ்டிதங்கள் பலவும் புரிந்தவனும், கரும்பின் சாற்றின் சுவை போன்றவனும், தேனின் இனிமையினைப் போன்றவ னும், நன்மைமிகுந்த பாலினைப் போன்றவனாய் இருப்பவனுமான எம்பெருமானைத் தவிர்த்து மற் றொன்றை தம்முடைய மனம் சிந்தை செய்யாது என எம்பெருமானின் கிருஷ்ணாவதார சேஷ்டிதங்களை யும், அருளையும் நினைந்து மகிழ்ந்து பாசுரம் இயற்றுகிறார் திருமங்கையாழ்வார்.

**வெண்சங்கம் ஊதியவாய் :**

*வகையறு நுண்கேள்வி வாய்வார்கள், நாளும்*
*புகைவிளக்கும் பூம்புனலும் ஏந்தி,*
*திசைதிசையின்*
*வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே,*
*வெண்சங்கம்*
*ஊதியவாய் மாலுகந்த வூர்*

வேதவேதாங்கங்களில் அருளப்பட்ட பரமாத்ம ஜீவாத்ம ஸ்வரூபங்கள், பரம புருஷார்த்தமான பிறவாப் பெருநிலையினை அடைவதற்கான வழி முறைகள், ஆத்மாவினை சூழ்ந்துள்ள விரோதிகள், பின்பற்றவேண்டிய வைணவ சரணாகதி தத்துவம் முதலான மிகவும் நுண்ணிய அர்த்தங்களை அரு ளும் பகவத்கீதை, ஸ்ரீபாஷ்யம் முதலான கிரந்தங்க ளில் நுண்மான்நுழைபுலமும், தேர்ச்சியும் வித்தக மும் கொண்ட அருளிச்செயல் வேத வித்வான்கள் உலகத்தின் அத்தனை திசைகளிலும் இருந்தும் தினந்தோறும் திருவேங்கடத்திற்கு வந்து நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கும் வேங்கடவனை தரிசித்து தூய தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்தும், நறுமணமிக்க மலர் மாலைகளைச் சாற்றியும், தூப தீபங்களால் அர்ச்சனை செய்தும் வழிபாடுகள் செய்து பிரார்த்தனை செய்த வண்ணம் இருக்கின்ற னர். மகாபாரதப் போரில் அர்ஜுனனுக்குச் சாரதியாய் தேர் தட்டிலே நின்று பாண்டவர்கள் வெல்வதற்காகப் போரினைத் துவங்கும் விதமாக தம்முடைய திரு வாயினில் சங்கினை வைத்து சங்கநாதம் எழுப்பிய கண்ணபெருமான் மிகவும் உகப்புடனே விரும்பி சேவை சாதிக்கும் திவ்யதேசம் திருவேங்கடம் என அருளுகிறார் பொய்கையாழ்வார்.

**செங்கனிவாய் :**

*வந்தாய் போலே வாராதாய் வாரா தாய்போல்*
*வருவானே,*
*செந்தா மரைக்கண் செங்கனிவாய் நால்தோ*
*ளமுதே எனதுயிரே,*
*சிந்தா மணிகள் பகரல்லைப் பகல் செய்*
*திருவேங் கடத்தானே,*
*அந்தோ அடியேன் உன்பாதம் அகல கில்லேன்*
*இறையுமே*

திருவேங்கடவன் அணுகிக் கலந்து அருள் புரிந்த வண்ணம் உள்ளான் எனும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும்போது உடன் மாயமாக மறைந் தும், மறைந்தவன் வருவதற்குக் காத்திருந்து இனி வரவே மாட்டான் எனத் துயரத்தால் வாடும்போது திடீரெனக் கண்முன் தோன்றி ஆச்சரியமும் அளித்து சேஷ்டிதங்கள் பலவும் அடியார்கள் பொருட்டு செய்தருளுபவன் திருவேங்கடமுடையான். செந் தாமரைப் போன்ற சிவந்த அழகிய திருக்கண்களை யும், நன்கு கனிந்த பழத்தினைப் போன்ற சிவந்த அதரங்களையும், அடியார்களைக் காத்தருளும் ஆற்றல்மிக்க நான்கு திருத்தோள்களையும் உடைய வனான எம்பெருமானின் திருமேனியில் சாற்றியுள்ள பல்வகை ஆபரணங்களில் பொதிந்துள்ள நவ ரத்தினங்களின் ஒளி பல திசைகளிலும் பல்கிப் பெருகி பரவியதால் திருமலையில் இரவும் பகல் போன்று பிரகாசிக்கிறது. தமது உயிரினை ஆட் கொண்ட அமுதம் போன்றவனான திருவேங்கடவ னின் திருவடிகளை ஒருகணமும் பிரியாது கைங்கர்யம் செய்து வாழ்ந்திருக்கும் அடிமைப் பேற்றினைப் பிரார்த்திக்கிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.

# அன்பில் கனிந்த அனசூயாதேவி

திரு.எஸ். ஸ்ரீதுரை ,
காஞ்சீபுரம்,
9486139685



எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திரேதாயுகத்தில் மனிதகுலத்தில் ஸ்ரீராமபிரானாக அவதரித்தருளி மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பல காரியங்களைச் செய்தருளினார்.

சீதாபிராட்டியைத் திருமணம் செய்துகொள்வதற்காக யாராலும் வளைக்க முடியாத சிவதனுசில் நாணேற்றியது, தவமும் பராக்கிரமமும் நிறைந்த பரசுராமரை வென்றது, தனியொருவராகப் பதினான்கு ஆயிரம் அசுரர்களைக் கொன்றது, கரதூஷணர்களை வதைத்தது, சபரிக்கு மோட்சமளித்தது, ஒரே பாணத்தினால் ஏழு சாலவிருட்சங்களைத் துளைத்தது, துந்துபி என்ற அரக்கனின் மலைபோன்ற எலும்புக் கூட்டினைத் தமது இடது திருவடியின் கட்டை விரலால் சுண்டி ஆகாயத்தில் எறிந்தது, சினத்தினால் தென்னி லங்கைக் கோமானையும், அவனுடைய தம்பியையும் சம்ஹாரம் செய்தது போன்ற பற்பல அற்புதச்செயல்களைப் புரிந்த ஸ்ரீராமபிரான் தம்மை ஒருபொழுதும் தெய்வமாகக் கருதியதில்லை.

மாறாக, **"ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்"** என்றே தம்மைப் போற்றித் துதித்த தேவர்களிடமும், முனிவர்களிடமும் கூறினார். தசரத புத்திரனாகப் பிறந்திருக்கும் நான் என்னை மனித குலத்தைச் சேர்ந்தவனாகவே கருதுகின்றேன் என்பது இதன் பொருளாகும்.

ஸ்ரீராமபிரான் சொல் ஒன்று செயல் வேறு என்பதையே அறியாதவர். தாம் எதைச் சொல்கிறாரோ அதையே கடைபிடித்தும் காட்டுபவர். மனித குலத்தவர்கள் தங்களை விட வயதில் பெரியவர்களையும், மதிக்கத்தக்கவர் களையும் வணங்குவது வழக்கம்தானே! தம்மை ஒரு மனிதப் பிறவியாகவே கூறிக்கொண்ட ஸ்ரீராமபிரானும், பெரியோர்களை நமஸ்கரித்தல் என்ற மனிதர்களின் வழக்கத்தைத் தாமும் கடைபிடித்தார்.

தந்தையார் தசரதசக்கரவர்த்தி, தாயார்கள் கௌசல்யை, சுமித்திரை, கைகேயி, குலகுரு வசிஷ்டர், விசுவாமித்திரர் ஆகியோரை நமஸ்கரித்து மரியாதை செய்தவராகிய ஸ்ரீராமபிரான் தம்முடைய வனவாசகாலத்தில் தாம் சந்தித்த ரிஷிகளையும், அவர்களுடைய தர்மபத்தினிகளையும் நமஸ்கரிக்கத் தவறியதில்லை. இவ்வகையில் ஸ்ரீராமபிரான் நமஸ்கரித்த அத்ரிமகரிஷியும், அவருடைய தர்மபத்தினியாகிய அனசூயையும் ஆதர்ச தம்பதிகள் என்றால் அது மிகையாகாது.

சித்திரகூடத்தில் தம்பி பரதனிடம் தம்முடைய பாதுகைகளைக் கொடுத்து அருளிய ஸ்ரீராமபிரான், தம்முடைய மனைவி, தம்பியுடன் அவ்விடத்திலிருந்து கிளம்பி தண்டகாரண்யம் நோக்கிச் செல்லும் வழியில் அத்ரிமகரிஷியின் ஆசிரமத்தைக் கண்டு அங்கு எழுந்தருளியிருந்த அத்ரி மகரிஷியை நமஸ்கரித்தார். சீதையும், லட்சுமணரும் உடன் நமஸ்கரித்தனர். அவர்களை வரவேற்ற அத்ரி மகரிஷி, தன் மனைவியாகிய அனசூயையை அழைத்து, ஸ்ரீராம பத்நியாகிய சீதை வந்திருக்கிறாள். அவளை வரவேற்று நம் ஆசிரமத்திற்குள் அழைத்துச் செல்வாயாக! என்று கூறுகிறார்.

*அநஸூயாம் மஹாபாகாம் தாபஸீம்*
*தர்மசாரிணீம்*
*ப்ரதிக்ருஹ்ணீஷ்வ வைதேஹீம் அப்ரவீத் ருஷி*
*ஸத்தம:*

என்ற வால்மீகி இராமாயண சுலோகமானது அத்ரியின் மனைவியைப் பொறாமை இல்லாதவள், பெரும் பாக்கியம் செய்தவள், தபஸீ, தர்மங்களை அநுஷ்டிப்பவள் என்றெல்லாம் வெகுவாகப் புகழ்கின்றது. இத்துடன் நிற்கவில்லை நம் வால்மீகி பகவான்,

*தசவர்ஷாணி அநாவ்ருஷ்ட்யாதக்தே லோகே*
*நிரந்தரம்*
*யயா மூலபலே ஸ்ருஷ்டே ஜாந்ஹவீ ச*
*ப்ரவர்த்திதா*

ஒரு சமயம் சேர்ந்தாற்போன்று பத்து வருட காலம் மழையே பெய்யாத நிலையிலும் தனது தவ வலிமையினால் அத்ரி மகரிஷியின் ஆசிரமத்தில் வசிப்பவர்கள் பசியின்றி உண்ணுவதற்கு வேண்டிய பழங்கள், கிழங்குகள் ஆகியவற்றை சிருஷ்டித்துக் கொடுத்ததுடன், அந்த ஆசிரம வளாகத்திலேயே புனிதமான கங்கைநதியின் பிரவாகத்தையும் அனசூயாதேவி ஏற்படுத்திக் கொடுத்தாள் என்று புகழ்கின்றார்.

இதையெல்லாம் விஞ்சும்படியான ஒரு காரியத்தையும் செய்திருக்கின்றாள் அனசூயா தேவி. அது என்ன தெரியுமா!

*தேவகார்ய நிமித்தம் ச யயா ஸந்த்வரமாணயா*
*தசராத்ரம் க்ருதா ராத்ரி: ஸேயம் மாதேவ*
*தே(அ)நக*

அனசூயாதேவி ஒரு சமயம் தேவர்களின் வேண்டுகோளை ஏற்று பத்து நாட்களுக்குச் சூரியோதயத்தையே நிறுத்தி வைத்திருக்கின்றாள் என்று கூறுகிறார் வால்மீகி.

வயது முதிர்ந்தவளும், மங்களகரமான தோற்றம் கொண்டவளுமாகிய அவ்வனசூயா தேவியை அனைவரும் நமஸ்கரித்தனர்.

அவர்களை மனமார ஆசீர்வதித்த அனசூயா தேவி, சீதாதேவியை நோக்கி, அன்புக்கு உரிய வைதேஹியே! அயோத்தியில் வசதிகள் நிறைந்த அரண்மனையில் உன் கணவனுடன் வசித்து வந்த நீ, அவனுடன் வனவாசம் புரிவதற்கும் தயாராக வந்து இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது என்று கூற, சீதாதேவியோ, அம்மா! தாங்கள் என்னைப் பாராட்டுவது சரியன்று. என்னுடைய கணவர் மூர்க்கராகவும், தீயநடத்தை கொண்டவராகவும் இருந்து, அவரை நான் விடாமல் இருந்திருந்தால் அப்பொழுது என்னைப் பாராட்டலாம். ஆனால், மிகவும் உயர்ந்த உத்தம குணங்களைக் கொண்டவராகிய என் கணவர் ஸ்ரீராமரை வனவாசத்திலும் விடாமல் நான் தொடர்ந்து வந்திருப்பதில் வியப்பேதும் இல்லையே என்று தன்னடக்கத்துடன் பதிலளிக்கின்றாள்.

தன் கணவராகிய இராமபிரானுக்கே அனைத்துப் புகழும் சேரவேண்டும் என்று நினைப்பவளான சீதையின் வார்த்தைகளால் மிகவும் மனம் மகிழ்ந்த அனசூயை, தன்னிடம் இருந்த வாடாத மலர்மாலை, வண்ணம் குறையாத வஸ்திரங்கள், அழகுக்கு அழகூட்டும் ஆபரணங்கள், நிலையாக மணம் வீசும் சந்தனம் போன்றவற்றை சீதைக்கு வழங்கி ஆசீர்வதித்தாள்.

நிறைந்த மனத்துடன் அனசூயா தேவி அளித்தவற்றைப் பெற்றுக்கொண்ட சீதாதேவி அவற்றைப் பிரியத்துடன் அணிந்து கொண்டு ஸர்வாலங்கார பூஷிதையாக ஸ்ரீராமனின் முன்பு வந்து நின்றாள்.

ஸாக்ஷாத் திருமகளாகிய ஸ்ரீமகாலக்ஷ்மியே ஜனகமஹாராஜாவின் திருமகளாக அவதாரம் செய்து மகிமை பொருந்திய இக்ஷ்வாகு வம்சத்தினைச் சேர்ந்த தசரத சக்கரவர்த்தியின் திருமகனான ஸ்ரீராம பிரானை மணந்து கொண்டாள். சர்வலோக நாயகியாகிய அந்த சீதாதேவி, மிருகங்கள் உலாவும் அடர்ந்த வனத்தின் நடுவில் உள்ள ஒரு பர்ணசாலையில் எளிமையாக வாழுகின்ற ஒரு ரிஷி பத்நியாகிய அனசூயாதேவி வழங்கியவற்றை மனமுவந்து ஏற்றுக்கொண்டதன் மூலம் அவ்வனசூயா தேவியையும் கௌரவப்படுத்தித் தன்னுடைய மதிப்பையும் உயர்த்திக்கொண்டாள் என்றே சொல்ல வேண்டும்.

சர்வலோகநாயகனாகிய ஸ்ரீராமபிரானும், சீதாதேவியும் தன்னைச் சந்திக்க வந்துள்ள அபூர்வமான சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய அனசூயாதேவி அந்த சீதாதேவியைநோக்கி, அம்மா சீதா! உனக்கும் ஸ்ரீராம

பிரானுக்கும் மிதிலா நகரத்தில் மிகவும் விசேஷமான கொண்டாட்டங்களுடன் விவாஹம் நடந்தேறியது என்பதை அறிவோம். அதியற்புதமான அந்த விவாஹ நிகழ்ச்சியை நேரில் வந்து காண இயலாத எங்களைப் போன்றவர்களுக்காக அந்நிகழ்ச்சியை உனது திருவாக்கினால் ஒரு முறை விவரமாகக் கூறுவாயா? என்று கோரிக்கை விடுத்தாள்.

கம்பீர நடையுடன், கையில் வில்லேந்தியபடி தம்பி லட்சுமணனுடனும், தவசீலராகிய விசுவா மித்திர முனிவருடனும் மிதிலாநகரத்து ராஜவீதிக ளில் நடந்து வந்த ஸ்ரீராமபிரானை அரண்மனை உப்பரிகையிலிருந்து கண்ணோடு கண் நோக்கி நெஞ்சுடன் நெஞ்சம் இரண்டறக் கலந்த நிகழ்வுகள் எல்லாம் சீதாதேவியின் நினைவில் அணிவகுத்தன.

ரிஷிபத்நியாகிய அனசூயாதேவி கேட்டுக் கொண்டபடி நாணத்தால் தலைகுனிந்தபடி ஆர்வம் ததும்பும் சொற்களுடன் அதியற்புதமான தன்னு டைய திருமண நிகழ்வுகளை சீதாதேவி விவரிக்க அத்ரிமகரிஷி, அனசூயாதேவியுடன் அந்த ஆசிரமத் தில் வசித்த சிஷ்யகோடிகள் அனைவரும் மனம் ஒன்றிக் கேட்டு மகிழ்ந்தனர்.

ஸ்ரீமத்ராமாயணத்தின் முதலாவது காண்டமா கிய பாலகாண்டத்தில் வரும் ஸ்ரீராமசீதா கல்யாணம், மீண்டுமொருமுறை இந்த அயோத்யா காண்டத்தில் வருவானேன்? உண்மையிலேயே அனசூயாதேவி அந்தத் தெய்வீகத் திருமண நிகழ்வை சீதாதேவியின் திருவாக்கினால் கேட்க விரும்பினாளா? என்று நம் மில் சிலருடைய மனங்களில் ஐயம் ஏற்படக்கூடும்.

இதுகுறித்து ஆழமாகச் சிந்தித்த நம் முன்னோர்களாகிய பெரியவர்கள் இதற்கு வித்தியாசமானதொரு காரணத்தைக் கூறுகின்றனர்.

ஸ்ரீமத்ராமாயணம் என்ற மஹாகாவியம் முதலில் ஸ்ரீமத்வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டு, அதன் பின்னர் ஸ்ரீராமபுத்திரர்களாகிய லவகுசர்கள் இருவ ராலும் அயோத்தியில் ஸ்ரீராமபிரானின் முன்னிலை யில் பிரசாரம் செய்யப்பட்டது. புனிதமான இந்த இதிகாசக் கதையானது எதிர்காலத்தில் ஆடல், பாடல், பிரவசனம் ஆகிய பலவிதங்களில் பலராலும் பிரசாரம் செய்யப்படும் என்பதை ஸ்ரீமத்வால்மீகி பகவான் முன்னரே கணித்திருந்தார். இந்நிலையில், ஸ்ரீமத்ராமாயணம் முழுவதையும் பிரவசனம் செய்யவும், நாடகமாக நடிக்கவும் நீண்ட காலம் பிடிக்கும் என்பதையும், ஆர்வலர்களால் எல்லா நாட்களிலும் வருகைதர இயலாது என்பதையும் அன்றே அவர் கணித்திருந்தார்.

எனவேதான், பாலகாண்டம் பிரவசனம் நடைபெறும் பொழுது வர இயலாதவர்கள் அயோத்தியா காண்டம் பிரவசனம் நடைபெறும் பொழுதாவது புனிதமான சீதாராம கல்யாணக் கதையைக் கேட்டுப் புண்ணியம் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ஸ்ரீமத்வால்மீகி மகரிஷி மீண்டும் ஒருமுறை அயோத்தியா காண்டத்தில் அத்திருக்கல்யாணம் இடம் பெற அனசூயா தேவியின் மூலம் ஒரு வாய்ப்பு அளித்தார் என்பதே பெரியோர்களுடைய அற்புதமான விளக்கமாகும்.

தன்னிடமுள்ள ஆடை ஆபரணங்களை ஸ்ரீசீதா தேவிக்குப் பரிசளித்து ஆசீர்வதித்த அனசூயாதேவி, புண்ணியமான சீதா கல்யாணத்தின் சிறப்புகளை மீண்டும் ஒரு முறை செவிமடுக்கின்ற வாய்ப்பு என்னும் மாபெரும் பரிசினை ஸ்ரீராம பக்தர்கள் அனைவருக்கும் வழங்கி இருக்கின்றாள் என்றே கூற வேண்டும்.இவ்விதம், ஜகந்மாதாவாகிய ஸ்ரீசீதா தேவிக்கும், ஸ்ரீமத்ராமாயணத்தில் ஈடுபட்டு மகிழ்கின்ற ஸ்ரீராம பக்தர்களும் ஒரு சேரப் பரிசு வழங்கி ஆசீர்வதித்துள்ள நம் அனசூயாதேவிக்கு நாம் அனைவரும் பல்லாண்டு பாடி மகிழ்வோமாக!

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

**ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியில் மாற்றம் இருந்தால் அல்லது அதை முறைபடுத்துவதன் பொருட்டு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) நேரில் வந்தோ அல்லது தபால் மூலமாகவோ தெரியப் படுத்தவும். மேலும்,** chiefeditortpt@gmail.com **எனும் மின் அஞ்சல் (இ-மெயில்) வாயிலாகவும் தெரிவிக்கலாம்.**

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517507.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

ஸ்வஸ்தி ஸ்ரீமன்மஹா மாண்டலேஸ்வர மேதினீ மீசர கண்ட கட்டாரி சாளுவ காண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பூறுவ தக்ஷிண பச்சிம சமுத்ராதிபதி கிருஷ்ண தேவ மஹாராயர் பிரிதிவி ராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாப்தம் 1454ன் மேல் செல்லா நின்ற சர்வசித்து வருஷம் மகர நாயற்றுப் பூர்வ பக்ஷத்து ஸப்தமியும் பானுவாரமும் பெற்ற ரேவதி நக்ஷத்திரத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து மேல் குன்ற நாட்டில் ஸ்ரீராம மங்கலப் பற்றில் நெய்தல் நெடுங்குன்றம் நயினார் ஈசாண்ட நயினார்க்குச் சகல பூசையும் நடக்க ஸ்ரீமது இம்மடி திருமலை நாயக்கர் காரியத்துக் கடவ நமச்சிவாய நாயக்கர் தன்மமாக அல்லாள நாதர் பிள்ளை நெடுங்குன்றம் ஏரிக்குத் தென்கிழக்கு மாதப் பறையர் தாங்கலும் தேவர் மாதப் பறையர் புறவடை நாலும் உள்படச் சங்கிறம் புண்ணிய காலத்திலே ஊரவர் பல பட்டையாகும் ஆக உதக தாராபூர்வமாகப் பண்ணிக் குடுத்தோம். சந்திராதித்தவரையும் செல்லக் கடவதாகவும் இத் தன்மத்துக்கு அகிதம் பண்ணினவர் கங்கைக் கரை யில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போவார்கள் உ.(கல்வெட்டு 765).

2. விசு வருடம் தை மாதம் 19ஆம் நாள் ஸ்ரீமத் அச்சுத விசயராகவ நாயக்கர் அய்யன் அவர்கள் காரிய தரிசியாக இருந்த சிம்ம நாயக்கர் ஈஸ்வரர் கோயிலுக்காகக் கிழவன் பூண்டி, மொசுபாடி ஆகிய இரண்டு கிராமங்களையும் நன்கொடையாக அளித்தார். இந்தக் கிராமத்தில் பொறுப்பு மென் காவல் வேண்டாம் என்றும் கட்டளை இட்டு, கோயில் பூசை தவறாமல் நடத்த செட்டியார் வசம் ஒப்படைக் கப்பட்டது. இக்கல்வெட்டு தீர்க்காசலேஸ்வரர் கோயில் வலப்புறம் மண்டப கிழக்குச் சுவரில் அமைந்துள்ளது. இதன் காலம் 1642ஆம் ஆண்டு.

விஷு வருஷம் தை மாசம் 19 ஸ்ரீமது அச்சுத விசைய ராகவ நாயக்கர் அய்யனவர்கள் காரியத் துக்கு கர்த்தரான சிங்கம நாயக்கர் யிசாண்டசர். யிசு பரர் கோயில் பூசை படித்தரத்துக்கு கிழவன் பூண்டி, மொசுபாடி கிராமமிரண்டும் முன் கோயிலுக்கு நடந்த படியே கட்டளையிட்டோம். அந்த கிராமத்தில் பொறுப்பு மென்காவல் உண்டானது வேண்டாம் என்று கட்டளையிட்டோம். அந்த படிக்கு கோயில் செட்டிமார் வசமாக நடத்திக் கொண்டு பூசை தாழ்வற நடத்தி வரச் சொல்லி கட்டளையிட்டோம். அந்தபடி உத்திர ரௌத்திரமாக நடத்திக் கொண்டு வரவும் இதுக்கு அகுதம் நினைச்ச பேர் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான் ஊர்க் கணக்கு நாச்சியாண்ணன் எழுத்து உ (கல்வெட்டு 766).

3. சக வருடம் 1518 துன்முகி வருடம் தை மாதம் 7ம் நாள் பூர்வ பட்சத்தில் சப்தமி திதியில் இக்கல் வெட்டு எடுக்கப்பட்டது. ஈசாண்ட நாயனார் தம்பிரா னுக்குத் தினமும் பூஜை செய்ய நாள் ஒன்றுக்கு அரை பணமாக மொத்தம் 15 பொன் தானமாகக் கொடுக்கப்பட்டது. இது அச்சுதப்ப நாயக்கரய்யன்



# திருநெடுங்குன்றம் கல்வெட்டுக்கள்

**பேராசிரியர்.**
**ஜி. நரசிம்மன்,**
**அனந்தபுரம்,**
**90001 27115**

அவர்களுக்காகத் தொழுவூர் தினகரன் பிள்ளை கட்டளையின்படி 15 பொன் தானமாகக் கொடுக்கப் பட்டது. அதாவது நெடுங்குன்றம் சிவபெருமான் பூஜைக்குத் தினம் அரைப்பொன் வீதம் மாதம் ஒன்றுக்கு 15 பொன்னைத் தானமாக அளித்ததாகத் தெரிய வருகின்றது. இக்கல்வெட்டு தீர்க்காசலேஸ் வரர் கோயில் மண்டப கிழக்குச் சுவரில் பதிக்கப்பட் டது. இது ஸ்ரீ வீரவெங்கடபதி தேவ மகாராயர் காலத்தில் அதாவது 1597 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் நாள் பொறிக்கப்பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீமன்மஹா மாண்டலேஸ்வரன் ஸ்ரீவீர பிரதாப ஸ்ரீவீரவெங்கடபதி தேவ மகாராயர் பிரிதிவிராஜ்யம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் 1518ன் செல்லா நின்ற துன்முகி சம்வஸரத்து மகர நாயற் நாள் நெடுங்குன்றம் யீசான நயினார் தம்பிரானுக்கு தினப்பூசைக்கு தினமொன்றுக்கு பணம் புண்ணியமாகக் கட்டளைக்குத் தொழுவூர்த் தினகரப்பிள்ளை கட்டளையிட்ட மொசிபாடிக்கு கோவப்பட்டு மென்காவல் 15 இந்தப் பொன் பதினஞ்சும் உபயமாகக் கட்டளையிட்டோம். இந்த தர்மம் சந்திராதித்த வரையும் நடக்கக் கடவதாகவும் மொசிபாடி மென்காவல் சர்வமானியமாக் கட்டளையிட்டோம். இந்தத் தர்மத்துக்கு அகிதம் பண்ணின பெர் (அ) பேர் உண்டானால் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போகக் கடவர்களாகவும் உ(கல்வெட்டு 767).

## முடிவுரை

ஸ்ரீ இராமச்சந்திர பெருமாள் கோயிலில் நான்கு கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று விஜயநகர காலத்தைச் சார்ந்தது. மற்றவை தஞ்சாவூர் சமஸ்தானத்தை ஆண்ட நாயக்கர்களின் ஆட்சியின் போது ஏற்படுத்தப்பட்டது. கோயிலைப் பராமரிக்க வேண்டி ஒரு கல்வெட்டும், விஜயராகவ மாணிக்கத்தாள் என்னும் முத்து பெண்மணிக்குக் கொடுத்தத் தானத்தைப் பற்றி ஒரு கல்வெட்டும், நெடுங்குன்றத்திற்கு வைத்தியரை நியமித்தல் பொருட்டு மூன்றாவது கல்வெட்டும் விளக்குகின்றன.

தீர்க்காசலேஸ்வரர் கோயிலில் மூன்று கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டு விஜயநகர அரசர்களை சார்ந்ததாகவும், ஒன்று அச்சுத விஜயராகவ நாயக்கரை சார்ந்ததாக வும் அமைந்து உள்ளது.

இக்கல்வெட்டுகளில் குறிக்கப்பட்ட செய்தி சூரிய சந்திரர்கள் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்றும், இந்தக் கல்வெட்டில் கூறப்பட்ட செய்தி களை மறுத்து ஊறு விளைவித்தால் அவர்கள் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத் தில் விழுவார்கள் எனக் கல்வெட்டுகளின் இறுதியில் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் மட்டும் தாய் தந்தையரை கொன்ற பாவத்திலே விழுவார்கள் என்றும் விளக்கப்பட்டுள்ளது.

முற்றும்...

## ஸப்தகிரி டிசம்பர் 2025 விடைகள்

1. சேதி தேசம்.
2. பாரதியார்.
3. திருப்பாணாழ்வார்.
4. ஸ்ரீகிருஷ்ண பகவான்.
5. மாணிக்கவாசகர்.
6. பெரியநம்பி.
7. நந்தியம்பெருமான்.
8. ஸ்ரீவடபெருங்கோவில்.
9. எம்பார்.
10. வைகுண்ட ஏகாதசி.
11. திருமங்கையாழ்வார்.
12. ஜயன், விஜயன்.
13. ஸ்ரீசண்டிகேசுவரர்.
14. பட்டினத்தார்.
15. சனகாதி முனிவர்கள்.






## போட்டி எண். 41

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி எம்.நிறைமதி
   சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.
2. செல்வி அ.அம்ரிதா
   சத்தியமங்கலம், நாமக்கல் மாவட்டம்.
3. செல்வி ஆர்.சஷ்டிகா
   சோமையனூர்,
   கோவை மாவட்டம்..



# பாதையும் பயணமும்

வாழ்க்கை வாழ்வதற்கே என்றாலும் வாழ்வு என்பது பயணங்களுடன் பயணிக்கப்படுவதாகும். பயணங்கள் தான் நம் வாழ்க்கையை முன்னேற்றிச் செல்ல பெரும் பங்கு வகிக்கிறது. பயணம் என்றாலே பாதை உண்டு. பாதைகள் என்றுமே பஞ்சு மெத்தை போல இருக்காது. ஆனால் பக்குவமாக இருப்பது அவசியம். நமது வாழ்வு பாதையினால் எவ்வாறு மேம்படுகிறது என்பதையும் பார்ப்போம்.

நமது உடலில் மூன்று தோஷங்கள் உள்ளன. ஒவ்வொரு தோஷத்திற்கும் அதனது குணம் மற்றும் அந்த தோஷம் நம் உடலில் அதிகமானால் என்ன நடக்கும், குறைந்தால் என்ன நடக்கும் என்பதை நம் ஆசாரியர்கள் வகுத்துக் கூறியுள்ளார்கள்.

பயணத்தால் வாத தோஷம் அதிகரிக்கும் என்பது ஆயுர்வேத சாஸ்திரத்தின் கூற்று. நமது உடலில் ஒவ்வொரு தோஷத்திற்கும் அதற்கான ஸ்தானங்களும் உண்டு. ஆயினும் பித்தம் மற்றும் கபம் இயங்குவதற்கு, நகர்வதற்கு வாத தோஷத்தின் பங்கு தவிர்க்க முடியாதது. பயணத்தினால் வாத தோஷம் அதிகரிக்கும் போது இந்த வாதத்தின் சீரற்ற தன்மையினால் பித்தமும் கபமும் கூட தன்னியல்பை இழக்க நேரிடும். பொதுவாக எந்தவொரு அதிவேக பயணமும் (விமானம், ரயில், கார்) தொடர்ச்சியான, விரைவான இயக்கத்தை உள்ளடக்கியது, அதன் விளைவாக வாத தோஷம் நிச்சயம் அதிகரிக்கிறது.

பயணத்தினால் பெரும்பாலும் தூக்கம் மற்றும் உணவு நேரங்கள் உட்பட தினசரி அட்டவணைகளை சீர்குலைக்கிறது. இதன் காரணமாக வாத தோஷம் அதிகரிக்கின்றது.

விமானங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட கார்களில் காற்று பொதுவாக மிகவும் வறண்டதாகவும், குளிராகவும் இருப்பதால் வாத தோஷம் அதிகரிக்கிறது.

பயணத்தின் போது, மக்கள் பெரும்பாலும் உலர்ந்த, குளிர்ந்த அல்லது பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் சிற்றுண்டிகளை (சிப்ஸ் போன்றவை) உட்கொள்கிறார்கள் அல்லது உணவை முற்றிலுமாகத் தவிர்க்கிறார்கள். இந்த வகையான உணவுகள் மற்றும் ஒழுங்கற்ற உணவுப் பழக்கங்கள் வாத தோஷம் மேலும் சீர்கெடுக்கக் காரணமாகிறது.

அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு தனி நபரும் அவரவர் ஆரோக்கியத்தில் கவனம் கொள்ளுதல் மிகவும் அவசியம். ஆகவே நம் பயணத்தால் அதிகரிக்கும் வாயுவை எவ்வாறு சமன் செய்து ஆரோக்கியமாக வாழலாம் என்று இனி பார்ப்போம்.

**ஆகாரம் :**

வறட்சியான பதார்த்தங்கள், வாழைக்காய், உருளைக்கிழங்கு, துவரம் பருப்பு போன்ற உணவுகளை கொஞ்சம் தவிர்த்து விட்டு பாசிப்பருப்பு மற்றும் ஏனைய காய்கறிகள் பழங்கள் சாப்பிடுவது நலம் பயக்கும்.

**செயல்பாடுகள்:**

வாத தோஷம் அதிகரிப்பதால் நம் உடலில் வறட்சி அதிகமாகிறது. ஆகவே தினந்தோறும் பயணத்தால் அதிகம் பாதிக்கப்படும் கழுத்து, இடுப்பு, கை, கால் போன்ற பகுதிகளுக்கு எண்ணெய் தேய்ப்பது நலம். தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், உளுந்து தைலம் போன்ற தைலங்களை தடவுவதால் வறட்சி குறைந்து வாதமும் குறைவதற்கு உதவி செய்யும். குறிப்பாக உளுந்து தைலம் தடவுவதால் எலும்புகளுக்கும் மஜ்ஜைகளுக்கும் மிகவும் ஊட்டமளிக்கிறது.

எளிமையான உடற்பயிற்சிகள் செய்வதும் நலம் பயக்கும்.

வாதம் அதிகரிப்பதால் மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளது. மலச்சிக்கல் காரணமாக அபான

வாத வைகுண்யம் ஏற்படுகிறது. அதன் காரணமாக இடுப்பு வலி போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு அதிகம். ஆகவே தினந்தோறும் நல்லெண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் 2 சொட்டு, 30 மி.லி. தண்ணீரில் கலந்து இரவு உணவுக்கு 30 நிமிடம் முன்னதாகவே உட்கொள்வதால் வாத தோஷம் குறைவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேற்படி உடல் உபாதை தொடர்ச்சியாக இருந்தால் மருத்துவர் ஆலோசனைப் பெற்று ஆரோக்கியம் பெறுவது அவசியம்.

பெற்றோர்கள் வலிகளின்றி இருந்தால்தான் குழந்தைகளின் பேச்சுக்களை காது கொடுத்து கேட்டு அவர்களுக்கு ஏற்படும் குறைகளை, தொந்தரவு களை கலைய முயற்சிப்பார்கள். இதனால் குழந்தை களின் மனதில் ஆழமான அன்பும் தைரியமும் ஏற்படும். சரீர ஆரோக்கியமும் மனவலமும் மிக்க குழந்தைகளே நம்முடைய மிகப்பெரும் பொக்கிஷம் ஆவார்கள்.

**ஆயுர்வேத மருத்துவர்**
**டாக்டர்.கி.ஐ.நிகிலா வெங்கட், கோவை, 89409 91234**

## நூல் மதிப்புரை




**நூலின் பெயர்** : **திக்கெட்டும் அருள் வழங்கும் திருமுருகன் திருத்தலங்கள்**

**நூல் ஆசிரியர்** : **அறந்தாங்கி சங்கர்**

**விலை/தொ.எண்** : **ரூ.300/- , 9444160161, 9080488624**

**கிடைக்கும் இடம்** : **அறந்தாங்கி சங்கர் பதிப்பகம், ஸ்ரீ அகத்தியர் குடில், எண்.9, பாஸ்கர் தெரு, நேரு நகர், சாலிகிராமம், சென்னை-93.**

முருகப்பெருமான் எத்தனையோ ஆலயங்களிலே பல்வேறு பெயர்களில் அமர்ந்து அருள்பாலித்து வருகிறார். பழனி, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, திருத்தணி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம் என்ற அறுபடை வீடுகளோடு மருதமலை, வயலூர், கந்தன் குடி, குருந்தமலை, சென்னிமலை, கர்நாடகாவில் குக்கி சுப்பிரமணியர், மலேசியாவில் பத்துமலை போன்ற பல்வேறு திருத்தலங்களிலும் அருளாட்சி செய்து வருகிறார். முருகப்பெருமானுடைய ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு அற்புதம் நிகழ்ந்த திருத்தலம் என்றால் அது முழுக்க முழுக்க உண்மையாகும். இதனை நூலாசிரியர் மிக அழகாக விளக்கி இருக்கிறார்.

பக்தர்களுக்கு தெரிந்த முருகன் ஆலயங்களைத் தவிர தெரியாத பல்வேறு அற்புதமான முருகன் கோயில்கள் பற்றிய செய்திகளும் இந்த நூலிலே இடம்பெற்றிருக்கின்றன என்பது சிறப்பான ஒரு செய்தியாகும்.

விராலிமலை, கந்தர் மலை, வள்ளி மலை, சிவன்மலை, தேனிமலை, குமரமலை, தபசுமலை ஞானமலை போன்ற அற்புதமான திருத்தலங்கள் இந்த நூலிலே இடம் பெற்று கந்தப் பெருமானுடைய புகழையைப் பறைசாற்றி கொண்டிருக்கின்றன.

ஆன்மீக அன்பர்களுக்கு குறிப்பாக முருக பக்தர்களுக்கு இந்த “திக்கெட்டும் அருள் வழங்கும் திருமுருகன் திருத்தலங்கள்” புத்தகம் ஒரு வழிகாட்டியாக விளங்கும் என்பது சந்தேகம் இல்லை.

எனவே அனைத்து ஆன்மீக அன்பர்களும் இந்தப் புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டால் முருகப்பெருமான் அருள் புரியும் ஆலயங்களைத் தரிசிக்க இது நிச்சயமாக உங்களுக்கு உதவும் என்பது உறுதி. முருகப்பெருமானை பல்வேறு ஆலயங்களிலே சென்று தரிசியுங்கள்... கந்தப் பெருமான் அருளால் வாழ்வில் வளமும் நலமும் பெறுங்கள்.

**- திருமதி. சாந்தி, சென்னை.**

# அருளாளனுக்கு ஆளவட்ட கைங்கரியம்

திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்
சென்னை, 97909 38925

பூவிருந்தவல்லியில் வைச்யகுலத்தில் பிறந்தவர் காஞ்சி பூர்ணர். இவருடைய தகப்பனார் ஒரு பண முடிப்பை இவரிடம் தந்து, இதை முதலாக வைத்து நம் குலமுறைப்படி வியாபாரம் பண்ணிப் பெருக்கு என்றார். இவர் அதை பகவத் பாகவத கைங்கர்யங்களில் செலவிட்டு விட்டார். 2 ஆண்டுகள் கழித்து அந்த மூலதனத்தை எந்த அளவுக்கு பெருக்கியுள்ளாய்? எனக் கேட்ட போது, கலங்காப் பெருநகரில் சேமித்துள்ளேன் என்று கூற, தந்தை கோபிக்கவே வீட்டை விட்டு வெளியேறினார்.

மாசி மாதம் மிருகசீரிஸ நட்சத்திரத்தில் அவதரித்ததால் அவருக்கு காஞ்சி பூர்ணர் எனப் பெயர். இவர் தினமும் காஞ்சி தேவப் பெருமாளுக்கு திருவாலவட்டம் (விசிறி) வீசும் கைங்கர்யம் செய்து வந்தார். அப்போது பெருமாள் மற்றும் தாயாருடன் நேரிடையாக உரையாடுவார். இதை திருக்கோளூர் அம்மாள் தன் திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியத்தில் "அவனுரைக்கப் பெற்றேனோ திருக்கச்சியார் போல" என்று புகழ்கிறார்.

இளையாழ்வார் தன் தாயாரின் அறிவுரையின் படி ஆளவந்தாரின் சீடரும் காஞ்சி தேவப் பெருமாளின் அந்தரங்க கைங்கர்யபரரான திருக்கச்சி நம்பிகளைத் தன்னுடைய வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டார். நம்பிகள் இளையாழ்வாரைக் காஞ்சி தேவப்பெருமாள் கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கும் சாலைக் கிணற்றிலிருந்து தினமும் தீர்த்தம் கொண்டு வந்து பெருமாளுக்கு திருமஞ்சன கைங்கர்யம் செய்யும்படி கூறினார். இளையாழ்வாரும் அந்த ஆணையை மகிழ்வுடன் ஏற்று தினமும் தீர்த்த கைங்கர்யத்தைச் செய்து வந்தார்.

ஒருமுறை இளையாழ்வார் திருக்கச்சி நம்பிகளின் உச்சிஷ்டத்தை (அவர் உண்ட பிரசாதத்தின் மிகுதியை) சாப்பிட விரும்பினார். இவரின் மனைவியால் அது நிறைவேறாது போனது. மேலும், இளையாழ்வார் திருக்கச்சி நம்பிகளிடம் மிகுந்த ஈடுபாடு ஏற்பட அவரையே சரணடைந்து தனக்கு பஞ்ச சம்ஸ்காரம் செய்வித்துத் தன்னை சீடனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார்.

அதற்கு நம்பி தான் பிராமணர் அல்லாததால் தனக்கு ஆசாரியன் ஆகும் தகுதி இல்லை. அதனால் பஞ்ச சம்ஸ்காரம் செய்துவிக்க இயலாது என்றார். சாஸ்திரங்களில் அதீத நம்பிக்கை உள்ள இளையாழ்வார் இவர் கூறியதை வருத்தத்துடன் ஏற்றுக் கொண்டார்.



திருக்கச்சி நம்பிகள் தேவப்பெருமாளிடம் எம்பெருமானுக்கு உகந்த திருநாமம் ஒன்றை தனக்கு சூட்டுமாறு வேண்டி நிற்க, (கஜேந்திராழ்வான் தேவ பெருமாளை வழிபட்டதால் கஜேந்திராழ்வான் தேவ பெருமாளுக்கு மிகவும் பிடித்தமானவர் என்பதால்) பெருமாளும் கஜேந்திரதாஸர் என்ற திருநாமத்தை திருக்கச்சி நம்பிகளுக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

எவருடைய திருவடித் தாமரையைத் தியானிப்பதால் எல்லாப் பாபங்களும் அழியுமோ அத்தகைய ஆளவந்தாரை தேவப்பெருமாள் அனுமதி பெற்று அவர் திருவடிகளைப் பற்றி தன் ஆசாரியராக ஏற்றார் நம்பிகள்.

பெரிய நம்பிகள் ஆளவந்தாரின் விருப்பத்தின் பேரில் ஆளவந்தாருக்கு அடுத்தபடியாக இளையாழ்வாரை ஆசாரியராக நியமிக்கவும், அதன் பொருட்டு இவரை சம்பிரதாயத்தில் ஈடுபடுத்தவும் எண்ணம் கொண்டு காஞ்சிபுரம் வந்து நம்பியிடம் தாம் வந்த காரியத்தைக் கூற, நம்பிகளும் அதற்கு மிகவும் மகிழ்ந்து ஆளவந்தாரின் பெருமைகளை இளையாழ்வாருக்கு எடுத்துரைத்து பெரிய நம்பிகளுடன் இளையாழ்வாரை ஸ்ரீரங்கத்திற்கு அனுப்பி வைத்தார்.

இளையாழ்வாரின் மனதில் நெடுநாட்களாக சில சந்தேகங்கள் இருந்து வந்தன. அதை திருக்கச்சி நம்பிகளிடம் தமக்குள்ள சந்தேகங்களை பெருமாளிடம் விண்ணப்பித்து தனக்கு விடை கூறு மாறு வேண்டினார். தேவபெருமாளும் அனைவரா லும் ஆறு வார்த்தைகள் என்று பிரபலமாக அழைக்கப்படும் ஆறு கட்டளைகளை இளையாழ்வாருக்கு அனுக்கிரகித்து அருளினார். அவைகள்:

1. நானே எல்லாவற்றுக்கும் மேலான மெய்ப் பொருள்.

2. நமது மதத்தில் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வேறு வேறு பொருள்கள்.

3. வீடுபேறு பெற வழி பிரபத்தியே.

4. பிரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இந்த உடலை விடும்போது பரமாத்மாவை நினைத்தே தீர வேண்டிய அவசியமில்லை. நினைக்கா விட்டாலும் மோக்ஷம் உண்டு

5. பிரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இந்த உடல் அழிந்தவுடனே முக்தி பெறுவர். பல பிறப்புகள் பிறக்க வேண்டாம்.

6. ஆளவந்தார் சீடரான பெரிய நம்பிகளை ஆசார்யனாகப் பற்ற வேண்டும்.

3 இந்த ஆறு வார்த்தைகளைப் பேரருளாளரிடம் இருந்து பெற்று இராமாநுஜருக்கு அளித்து உதவியதால் நம்பிகளை பிரான் என்று அழைக்கிறோம்.

நாம் அனைவரும் துதித்து நற்கதி பெற "தேவராஜ அஷ்டகம்" அருளினார். இது நித்தியம் அனுட்டானம் பண்ணவும், சுலபமாயும், தெளிவாக வும், எல்லா வருணத்தவரும் அறியும்படி உள்ளது.

*''நமஸ்தே அஸ்திசைலேச''* என்கிற முதல் சுலோகத்தினால் துவய மந்திரப் பொருளை நினைவு படுத்துகிறது. இரண்டாம் சுலோகத்தினாலும், எட்டாம் சுலோகத்தினாலும் பகவானுடைய கடாக்ஷம் ஒன்றே எல்லாவிதமான லக்ஷணத்தையும் செய்ய வல்லதாகையால் இந்த அஷ்டகம் நம்பிகள் கடாக்ஷம் ஒன்றையே தாம் பெறும் பேறாக உள்ளது.

மணவாள மாமுனிகள் தன்னுடைய தேவராஜ மங்களம், 11வது சுலோகத்தில் திருக்கச்சி நம்பிகளின் மேன்மையையும், தேவப்பெருமாளுக்கு அவர் மீதுள்ள பரிவையும் நம்பிகளிடம் உள்ள பேரன்பால் தன்னுடைய அர்ச்சாவதாரப் பெருமைகளை குலைத்துக் கொண்டு உரையாடிய ஹஸ்திகிரீசனுக்கு ஸர்வ மங்களம் உண்டாகட்டும் என்கிறார். நாமும் பக்தர்களை முன்னிட்டுக் கொண்டே பகவானை வழிபட வேண்டும் எனத் தெளிவுபடுத்துகிறார்.

நாம் அனைவரும் திருக்கச்சி நம்பிகளின் திருவடித் தாமரைகளில் பணிந்து அவருக்கும் பகவானுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் போலவே நமக்கும் எம்பெருமான் மற்றும் ஆசார்யன் ஆகியோரிடம் ஸம்பந்தத்தை ஏற்படுத்தித் தரும்படி பிரார்த்திப்போம். காஞ்சி வரதராஜனுடைய திருவருளுக்கு இலக்கானவர், இராமாநுஜ முனிவரால் பூஜிக்கத்தக்கவர். இப்படி மிக உயர்ந்த வர். நல்லோர்களுக்குப் புகலிடமானவர் திருவடி களுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

# குறுக்கெழுத்துப் புதிர் -115

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | 3 | | ■ | ■ | |
| | ■ | | ■ | | ■ | ■ | | 4 | | | |
| | ■ | | | | | | 5 | ■ | ■ | ■ | |
| | ■ | | | | | 6 | | ■ | | | 7 |
| 8 | | | | 9 | | | | 10 | | | |
| | ■ | | | | 11 | | | | 12 | | 13 |
| | 14 | | 15 | 16 | | | | 17 | ■ | | |
| ■ | | | | ■ | 18 | | | | ■ | | |
| | | 19 | | ■ | | | 20 | | ■ | | |
| | | | | 21 | | | | | | 22 | |
| | | | 23 | | | | ■ | | ■ | ■ | |
| 24 | ■ | | | | | 25 | ■ | | ■ | ■ | ■ |

தொகுப்பு : திருமதி எம். இராஜகுமாரி, ஆரணி, 99762 38430.

புதிருக்கு விடை அறிய 38ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

01. திருமலைவாசனுக்குத் தீர்த்தக் கைங்கர்யம் செய்தவர்...(9)

04. தேவலோக நடன மாதர்களுள் ஒருவர்...(3)

08. ஆதிசங்கரர் மகாலக்ஷ்மியைத் துதித்து பாடியது...(11)

18. இந்துக்கள் பசுவை...(3) என்று போற்றி வழிபடுவர்.

21. திருஇந்தளூர் திருத்தலத்தில் சேவை சாதிப்பவர்...(7) ன்.

23. மன்மதனின் இணை...(4)

## வலமிருந்து இடம்

05. முருகப் பெருமானின் பெயர்களுள் ஒன்று...(5)

06. ஆண்டாள் பகவானை மாலே ...(5) என்று போற்றுகிறார்.

07. முருகப்பெருமானின் மனைவி...(3)

11. மகாபாரதத்தில் சிறந்த கொடை வள்ளல்...(4)

12. அசோக வனத்தில் சீதைக்கு ஆதரவாக இருந்தவள்...(4)

16. தெய்வானை திருமணத்திற்கு இந்திரன் பரிசாக அளித்தது...(5)

17. அர்ச்சுனனின் பெயர்களுள் ஒன்று...(4)

20. இராவண வதத்தின் போது இராம பிரானுக்குத் தேரோட்டியவர்...(3)

25. பிரம்மதேவனின் வாகனம்...(4)

## மேலிருந்து கீழ்

01. கலியுகக் கண்கண்ட தெய்வம் அருளும் திருத்தலம்...(7)

02. அசுர சிற்பி...(3)

03. ஸ்ரீகிருஷ்ணரின் மாமன்...(4)

10. மூவுலகளந்த பெருமான்...(8)

13. கருடனின் பெயர்களுள் ஒன்று...(6)

14. செல்வத்தை அளிப்பவள்...(5)

15. இந்துக்களின் புனித தலம் வடக்கில் காசி என்றால்,தெற்கில்...(6)

19. சீதையை இராவணன் கவர்ந்து செல்ல மாயமானாக வந்தவன்...(4) என்ற அசுரன்.

## கீழிருந்து மேல்

09. இலங்கை ஆண்ட அசுர வேந்தன்...(4)


13. தேவர்களின் சிற்பி...(6)

19. ஸ்ரீகிருஷ்ணரின் பெயர்களுள் ஒன்று...(4)

22. பீஷ்மரின் தாயார்...(5)

24. மூலவர் பெருமானின் திருப்பாதங்களை தாயார் தாங்கியுள்ள திருத்தலம் அமைந்துள்ள ஊர்...(4)







# மால் நந்தி

-படிமக்கலைஞர்
திரு.ப.சரவணன்,
குடந்தை.

பொதுவாக பல சிவாலயங்களில் 5 வகையான நந்திகள் அமைந்திருப்பதைக் காணலாம். அவை 1. இந்திர நந்தி, 2. வேதநந்தி எனும் பிரம்ம நந்தி, 3.ஆத்ம நந்தி, 4. மால் நந்தி எனும் மால் விடை, 5.தருமநந்தி.

ஒரு சமயம் இந்திரன் இடப வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். போகங்களின் அதிபதியாகிய இந்திரன் வடிவாக விளங்கும் இந்த நந்தியைப் போகநந்தி என்றும், இந்திர நந்தி என்றும் அழைக்கின்றனர். ஒரு முறை பிரமதேவன் நந்தி வடிவம் கொண்டு சிவபெருமானைத் தாங்கினான். வேதனான பிரமன் நந்தி வடிவம் தாங்கியமையால் இந்த நந்தியை “வேத நந்தி”, “வேதவெள்விடை”, “பிரமநந்தி” என பல பெயர்களால் அழைக்கின்றனர்.

சிவாலயங்களில் கொடி மரத்தை ஒட்டி, தலைமை நந்தியாக அமையும் நந்தியம் பெருமானை “ஆன்ம நந்தி” என்று அழைப்பர். அருளும் ஸ்ரீமகாவிஷ்ணு பகவான், திரிபுரம் எரித்த அருள்மிகு திரிபுராந்தக மூர்த்தி மகிழ மால்நந்தியாக எழுந்தருளிய வரலாறு: ஒரு காலத்தில் வித்யுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்ற மூன்று அசுரர்கள் பிரமதேவன் அருளிய வரத்தால் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட பறக்கும் சக்தியுடைய மூன்று கோட்டைகளில் இருந்து கொண்டு தேவர்களைத் துன்புறுத்தி வந்தார்கள். இம்மூன்று அசுரர்கள் தந்து வந்த தொல்லைகளைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். இதனைக் கேட்ட சிவபெருமானும் மூன்று அசுரர்களையும் அழிக்க வில்லேந்திய திரிபுர சம்ஹார மூர்த்தியாகப் புறப்பட்டார். தேவர்கள் பூமியைத் தேராக்கி, நான்கு வேதங்களையும் குதிரைகளாக்கி, பிரம்மாவைச் சாரதியாக நியமித்து, சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாக்கி சிவபெருமானுக்குச் சிறந்ததொரு தேரினைச் செய்து கொடுத்தார்கள். தாங்கள் அளிக்கும் இந்தத் தேர் இல்லாமல் சிவபெருமானால் முப்புரங்களை வெல்ல முடியாது என எண்ணினர். அதை உணர்ந்த சிவபெருமான் அந்தத் தேர்த் தட்டின் மீது தன் வலக்காலை ஊன்றி ஏறினார்.

அவ்வாறு அவர் ஊன்றிய போதே அத்தேரின் அச்சு மளமளவென்று முறிந்தது. தேவர்கள் தாங்கள் செய்தளித்த ஒப்பரிய தேர் பெருமானின் ஒரு கால் அழுத்தத்தைக் கூட தாங்க மாட்டாமல் முறிந்தது கண்டு அஞ்சி மகாவிஷ்ணு பெருமானைத் தொழுதனர். அப்பொழுது திருமால் இடபவடிவம் (இதுவே மால்நந்தி) கொண்டு சிவபெருமானைத் தாங்கி அவரை மகிழ்வித்தார். இதனைத் தொடர்ந்து சிவபெருமான் வில் அம்பு உள்பட எதையும் பயன்படுத்தாமல் அசுரர்களைப் பார்த்து சிரித்தார். அந்தச் சிரிப்பிலேயே அசுரர்கள் சாம்பலாயினர் என்று திருவாதிகை தல புராணம் எடுத்துரைக்கிறது.

இந்த மால்நந்தியானது சக்தி பதமான இரண்டாவது ஆவரணத்துள் அமைந்துள்ளதாகும். இதனை “மால்விடை” என்றும், “மால்வெள்விடை” என்றும் அழைப்பார்கள். சிவாலய மகா மண்டபத்தில் அமையும் சிறு நந்தியை தருமநந்தி என்று அழைக்கின்றனர். மேற்காணும் மால்நந்தி வரலாற்றை எடுத்துரைக்கும் சிற்பங்களில் ஒன்று திருவதிகை ஆலய இராஜ கோபுரத்திலும், மற்றொன்று கும்பகோணம் மகாமகக் குள மண்டபத் தூண் ஒன்றில் உள்ளதும், இதே போல் தாராசுரம் ஐராதீஸ்வரர் ஆலயத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சூரியனைக் காத்த நிழல்



– முனைவர் ஸ்ரீ உ. வே. அத்தங்கி ஸ்ரீநிவாஸாசார்யார் சுவாமி,
சென்னை, 99402 91186.

உலகில் சூரியனால் எங்கும் வெளிச்சம் பரவும்போது மரம் முதலிய பொருட்களினால் நிழல் ஏற்படும். அந்நிழல் பலருக்கும் வெப்பத்தைப் போக்கி குளுமையைக் கொடுத்து காக்கும். இது இயற்கையில் நடப்பதொன்று. ஆனால், சூரியனையே காத்த நிழல் என்று ஒன்று உள்ளதா எனில் உள்ளது என்றே கூறலாம்.

*புண்யாம்போஜ விகாசாய பாபத்வாந்த க்ஷயாய ச*
*ஸ்ரீமாந் ஆவிரபூத்பூமௌ ராமாநுஜ திவாகர:*

என்கிறபடி எம்பெருமானின் உகப்பு (புண்யம்) எனும் தாமரை மலர்வதற்கும், எம்பெருமானின் சீற்றம் (பாபம்) எனும் இருள் விலகுவதற்கும், சிறந்த ஒப்பற்ற ஞானம், பக்தி முதலான செல்வத்துடன் விளங்கும் ஸ்ரீ ஆதிசேஷன் இருள்தருமாஞாலமாகிற பூமியிலே, ஸ்ரீபெரும்பூதூரிலே இராமாநுஜர் எனும் சூரியனாகத் தோன்றியருளினார். இராமாநுஜர் இளம்பிராயத்திலே இளையாழ்வார் எனும் இயற்பெயரோடு விளங்கினார். யாதவ பிரகாசர் எனும் மாயாவாத சந்நியாசி குருவினிடம் இளையாழ்வார் வேதாந்த அர்த்தங்களைக் கற்றுக் கொண்டிருந்தார். யாதவ பிரகாசர் வேதாந்தத்திற்கு முரண்பாடான அர்த்தத்தை உபதேசிக்கும் பொழுதெல்லாம் இளையாழ்வார் அத்தை சகியாதவராய், மறுத்து பொருத்தமான அர்த்தங்களை வெளிப்படுத்தினார். இதனால் கோபமடைந்த யாதவ பிரகாசர், ஒரு சமயம் இளையாழ்வாரையே மாய்ப்பதற்கு வழி தேடினார். கங்கை யாத்திரை எனும் பெயரிலே சீடர்களை அழைத்துக் கொண்டு கங்கையை நோக்கி புறப்பட்டார். அப்படி சென்று கங்கையிலே இளையாழ்வாரை நதியின் போக்கிலே இழுத்துச் செல்லும்படி செய்து அவரை மாய்ப்பதற்கு திட்டமிட்டார்.

இதனை முன்கூட்டியே உணர்ந்த ஸ்ரீ கோவிந்த பெருமாள், விந்திய மலைப்பகுதியை அடைந்தபோது இளையாழ்வாரை தனியாக ஒரு இடத்திலே சந்தித்து யாதவ பிரகாசரின் சதித்திட்டத்தைத் தெரிவித்தார். மேலும், இளையாழ்வாரை அங்கிருந்து வேறு வழியில் சென்று உயிர் தப்பி விடும்படி பிரார்த்தித்துக் கொண்டார். இளையாழ்வாரும் அதை ஏற்றுக் கொண்டு அங்கு இருந்து விலகி ஸ்ரீபெருந்தேவித் தாயார் ஸ்ரீபேரருளாளப் பெருமாளின் அருளோடு ஓர் இரவிற்குள் பெருமாள் கோயிலுக்குச் சென்று சேர்ந்தார். இப்படி ஸ்ரீகோவிந்த பெருமாள் இளம் வயதிலேயே இளையாழ்வாரை மரண ஆபத்திலிருந்து காத்து கொடுத்தார். அத்தகைய ஸ்ரீ கோவிந்த பெருமாள் இராமாநுஜரின் நிழல் என்றே குலாவப்படுகிறார். ஸ்ரீ கோவிந்த பெருமாள் எனும் ஆசாரியர் குரோதன எனும் ஆண்டில் தை மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் அவதரித்தார். ஸ்ரீபெரும்புதூர் வட்டாரத்தில் சுங்குவார்சத்திரம் அருகாமையில் மழலை மங்கலம் எனும் தலத்தில் அவதரித்தார். இவரின் தந்தை வட்டமணி குலத்துதித்த கமல நயன பட்டர், தாய் ஸ்ரீ திருமலை நம்பியின் இரண்டு சகோதரிகளுக்குள் இளைய சகோதரியான ஸ்ரீ பெரிய பிராட்டியார். இராமாநுஜரின் தாயான ஸ்ரீ பூமிப் பிராட்டி திருமலை நம்பியின் மற்றொரு சகோதரி.

எனவே இராமாநுஜரின் சிறிய தாயாரின் மகன் எனும் முறையில் கோவிந்த பெருமாள் அவரின் தம்பியாகிறார்.

இளையாழ்வார் யாதவ பிரகாசரிடம் வேதாந்த அர்த்தங்களைக் கற்பதை கேள்வியுற்று கோவிந்த பெருமாள் தாமும் இளையாழ்வாருடன் சேர்ந்து கற்க விரும்பி யாதவ பிரகாசரிடத்திலேயே சீடராக சேர்ந்தமை இளையாழ்வார் மீது இளம்பிராயத்திலேயே கோவிந்த பெருமாள் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துகிறது.

இளையாழ்வார் துறவறம் மேற்கொண்டு இராமாநுஜர் என்ற திருநாமத்தோடு திருவரங்கத்திலே நித்தியவாசமாயிருந்து கைங்கர்யங்களைச் செய்தார். அச்சமயத்திலே இராமாநுஜர் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாய கைங்கர்யங்களைச் செவ்வனே ஆற்றுவதற்கு தமக்குத் தக்கத் துணையாக ஒரு சீடன் வேண்டும் என்று எண்ணினார். அப்போது அவருக்கு முதன் முதலாக நினைவிற்கு வந்தவர் கோவிந்த பெருமாளே ஆவார். இளம் பருவத்திலே தம்மை காத்துக் கொடுத்த அவரே தமக்குற்ற சீடனாக இருப்பார் என்று கருதினார். அந்த சமயத்திலே கோவிந்த பெருமாள் காளஹஸ்தி என்கிற இடத்திலே உள்ளங்கைகொணர்ந்த நாயனார் எனும் பெயரோடு சிவபக்தராக வாழ்ந்து வந்தார்.

அவரை திருத்துவதற்காக, தங்கள் இருவருக்கும் தாய் மாமனான திருமலை நம்பியே தகுதியானவர் என்று நிச்சயித்து, அவரிடம் இராமாநுஜர் பிரார்த்தித்தார். திருமலை நம்பியும் அதை ஏற்றுக் கொண்டு மூன்று முறை முயற்சித்து கோவிந்த பெருமாளை திருத்திப் பணி கொண்டார். இதைக் கேள்வியுற்றதும் இராமாநுஜர் மிகவும் மகிழ்ந்து தாமே திருமலை நம்பியிடம் சென்று கோவிந்த பெருமாளை தமக்குச் சீடனாகப் பெற்றுக் கொண்டு அவரை தன்னுடன் திருவரங்கத்திற்கு அழைத்து வந்தார். இது இராமாநுஜருக்கு கோவிந்த பெருமாளிடம் உள்ள பேரன்பைப் புலப்படுத்துகிறது. அத்தகைய கோவிந்த பெருமாள் *''ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயினி, ததாயத்த ஸ்வரூபாஸா ஜீயாந்மத் விஸ்ரமஸ்தலி''* என்கிறபடியே இராமாநுஜரின் திருவடிகளுக்கு நிழலைப் போன்றிருப்பவராய், கோவிந்தன் எனும் திருநாமத்தைக் கொண்டிருப்பவராய், அவரை விட்டுப் பிரியாமல் அவரின் பொருட்டே தன் இருப்பைக் கொண்டவராய், நம் அனைவருக்கும் இளைப்பாறும் இடமாய் விளங்குகிறார். ஆக, இராமாநுஜரின் நிழலாக இருக்கக்கூடிய கோவிந்த பெருமாள் இராமாநுஜர் எனும் சூரியனைக் காத்துக் கொடுத்தார். இராமாநுஜரின் திருமேனியைக் காத்தது மட்டும் இன்றி அவரின் திருவுள்ளத்தையும் காத்தவர் கோவிந்த பெருமாள். ஒரு சமயம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலரும் கோவிந்த பெருமாளின் ஆத்ம குணங்களைச் சொல்லி கொண்டாட கோவிந்த பெருமாளும் அதை இசைந்து தமக்கு அந்த பெருமைகள் அனைத்தும் உண்டு என்று ஏற்றுக்கொண்டு தம்முடைய பெருமைகளை தாமே சொல்லிக் கொண்டு புகழ்ந்து கொண்டார்.

இதை அறிந்த இராமாநுஜர் கோவிந்த பெருமாளை அழைத்து பிறர் உம்மை புகழும் போது அதை ஏற்றுக் கொள்ளாமல் உம்முடைய தாழ்ச்சியைச் சொல்லிக் கொள்வதை விட்டு இப்படி புகழ்ந்து கொள்ளலாமா என்று வினவினார். அதற்கு கோவிந்த பெருமாள் தனக்கு தனியான பெருமைகளைச் சொல்ல வேண்டும் எனில் தான் இராமாநுஜரிடம் சீடன் ஆவதற்கு முன்பு இருந்த நிலையில் தான் கொண்டிருந்த தாழ்வுகளையன்றி மற்றெதையும் கூற இயலாதென்றும், இராமாநுஜரின் தொண்டனான பின்னர் தனக்கு ஏற்பட்ட குணங்களனைத்தும் அவரின் இன் அருளாலேயே விளைந்தவை என்பதை ஒருக்காலும் மறுக்க இயலாததாகையினால் தாம் அப்படி புகழ்ந்து கொண்டதாக விண்ணப்பித்தார். இதனைக் கேள்வியுற்ற இராமாநுஜர் உள்ளம் நெகிழ்ந்து கோவிந்த பெருமாளிடம் தமக்கும் அவரிடம் உள்ள குணங்கள் ஏற்படுமாறு அன்போடு தம்மை அணைத்துக் கொள்ள பிரார்த்தித்தார். இவ்வாறு இராமாநுஜரின் நிழலைப் போன்ற கோவிந்த பெருமாளின் குணங்கள் இராமாநுஜர் எனும் சூரியனுக்கே குளிர்ச்சியைக் கொடுத்து மிகவும் மகிழ்விக்கிறது. கோவிந்த பெருமாளுக்குத் திருமணமாகி இருந்தாலும் இல்லற வாழ்க்கையில் விருப்பமின்றி இராமாநுஜருடைய தொண்டுகளிலேயே முப்போதும் அன்புடன் ஈடுபட்டு இருந்தார். இராமாநுஜர் துறவியாக இருக்குமா போலே அவருடைய நிழலான கோவிந்த பெருமாளும்

துறவியாகவே ஆனார். கோவிந்த பெருமாள் துறவறம் மேற்கொண்ட போது எம்பெருமானார் தம்முடைய நிழலும் தம்மைப் போன்றே அழைக்கப்பட வேண்டும் எனும் விருப்பத்தோடு, தம்முடைய எம்பெருமானார் எனும் திருநாமத்தையே அவருக்குச் சூட்டினார். கோவிந்த பெருமாள் எம்பெருமானார் எனும் திருநாமத்துடன் இராமாநுஜர் ஒருவரே விளங்க வேண்டும் என்றும், தனக்கு அவ்வளவு பெருமை கொண்ட திருநாமம் தகாது என்றும் விண்ணப்பிக்க, இராமாநுஜர், எம்பெருமானார் எனும் திருநாமத்தைச் சுருக்கி எம்பார் என்று சூட்டினார். எம்பார் எனும் பெயரின் விளக்கமே வட மொழியில் அமைந்த அவரின் தனியன் சுலோகத்தில் "மத்விஸ்ரமஸ்தலீ" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எம்பார் என்றால் "நமக்கேற்ற ஓய்வெடுக்கக்கூடிய இடம்" என்று பொருள்படும்.

திராவிட வேதமான திவ்யபிரபந்தங்களுக்கு சிறந்த, சரியான பொருளை அனைவரும் அறிய வேண்டும் என்பது இராமாநுஜரின் முக்கியமான விருப்பம். இதைப் பின்பற்றி எம்பார் திவ்ய பிரபந்த பாசுரங்களுக்கு சிறந்த பொருளை பல இடங்களில் அருளிச்செய்துள்ளார். ஒரு சமயம் எம்பாரிடம் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரியாழ்வார் திருமொழியிலுள்ள இறுதியான பாசுரத்தில் ***''சாயை போல பாடவல்லார் தாமும் அணுக்கர்களே''*** எனும் சொற்றொடரின் பொருளை விளக்குமாறு பிரார்த்தித்தனர். அப்போது எம்பார் உள்ளே சென்று இராமாநுஜரின் பாதுகைகளை சில நொடிகள் தலையில் தரித்துவிட்டு இராமாநுஜர் தமக்கு அப்பொருளை அருளிச் செய்தார் என்று கூறி பெரியாழ்வார் திருமொழி பாசுரங்களை அன்போடு பாடுபவர்கள் எம்பெருமானுக்கு சாயை அதாவது நிழலைப் போலே நெருங்கி இருந்து தொண்டு புரிவார்கள் என்று பொருளை விளக்கினார். ஒரு சமயம் திருவரங்கத்திலே எம்பெருமானார் முன்னிலையில் அரையர் சுவாமி திவ்ய பிரபந்தத்தில் ***''இன்னமென் கையகத்து ஈங்கொரு நாள் வருதியேல் என் சினம் தீர்வன் நானே''*** (பெருமாள் திரு. 6–8) என்கிற பாசுரத்திற்கு அபிநயம் செய்து காட்டினார். கண்ணபிரான் மீது ஊடல் கொண்ட பாவனையில் குலசேகர பெருமாள் ஒரு பதிகம் அருளிச் செய்துள்ளார். அதில் இப்பாசுரத்தில் கண்ணபிரானே! இன்று நீ தப்பி ஓடினாலும் மற்றொரு நாள் நீ என்னிடம் வரும்போது என் கோபத்தைத் தீர்த்துக் கொள்வேன் என்று கோபிகை கூறுகிறாள். அதை அரையர் சுவாமி அபிநயம் செய்யும்போது தம் கைகளால் மற்றொருவரை அரைவதைப் போலவும், காலால் உதைப்பது போலவும் செய்து காட்டினார்.

கண்ணனிடத்திலே ஊடல் கொண்டுள்ள கோபிகைகள் கண்ணன் தாமதமாக வரும் பொழுது கோபத்தை வெளிப்படுத்துவதற்கு கைகளால் அடிப்பதோ, காலால் உதைப்பதோ செய்யார்கள். அப்படிச் செய்தால் காதலியுடைய கை கால்கள் தன் பேரில் படுவது காதலனுக்கு மிகவும் உகப்பையே ஏற்படுத்துமாகையினால், அது கண்ணனுக்கு மகிழ்ச்சியையே ஏற்படுத்தும். எனவே கண்ணனுக்கு வருத்தம் ஏற்படுத்துமா போலே கோபிகைகள் தங்கள் முகத்தை மூடிக்கொண்டு திருப்பிக் கொள்வார்கள். இதுவே இந்தப் பாசுரத்தில் ஆழ்வார் வெளிப்படுத்தும் பாவம் என்று தொலைவில் வீற்றிருந்த எம்பார் தமது செய்கையினால் குறிப்பிட்டுக் காட்டினார். அதை அரையர் சுவாமி கண்டுகொண்டு தாம் அபிநயம் செய்வதைத் திருத்திக் கொண்டார், இதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற எம்பெருமானார் இப்படிப்பட்ட சிறந்த அர்த்தத்தை எம்பாரைத் தவிர வேறொருவர் கூறியிருக்க முடியாது. எனவே இக்குழுவில் எம்பாரே இருந்தீரோ! என்று வினவியருளி அவரை அருகே அழைத்து அணைத்துக் கொண்டார். இதைப் போன்று பல விடங்களிலும் எம்பார் எம்பெருமானாரின் திருவுள்ளத்தை அனுசரித்து, திவ்யபிரபந்தப் பாசுரங்களின் அர்த்தத்தை சிறப்பாக விளக்கி னார். இவ்வாறு இராமாநுஜர் எனும் சூரியனை, இராமாநுஜப் பதச்சாயா எனப்படுகிற அவரின் நிழலான எம்பார் காத்து அருளினார். அப்படிப் பட்ட எம்பாரின் திருவடிகளைப் பணிந்து அவருடைய 1000வது திருநக்ஷத்திர மகோத்சவத்தைக் கொண்டாடி, கைங்கரியங்களைச் செய்து பல்லாண்டு பாடுவோம்.




நாகேந்த்ரஹாராய த்ரிலோசனாய
பஸ்மாங்கராகாய மகேஸ்வராய
நித்யாய சுத்தாய திகம்பராய
தஸ்மை 'ந' காராய நமசிவாய

மந்தாகினீஸலில சந்தன சர்சிதாய
நந்தீஸ்வர ப்ரமதநாத மகேஸ்வராய
மந்தார புஷ்ப பஹுபுஷ்ப ஸுபூஜிதாய
தஸ்மை 'ம' காராய நமசிவாய

சிவாய கௌரீ வதனாப்ஜ ப்ருந்த
சூர்யாய தக்ஷாத்வர நாஸகாய
ஸ்ரீநீலகண்டாய வ்ருஷத்வஜாய
தஸ்மை 'சி' காராய நமசிவாய

வசிஷ்ட கும்போத்பவ கௌதமாதி
மௌனீந்த்ர தேவார்சித சேகராய
சந்த்ரார்க வைஷ்வாநரலோசனாய
தஸ்மை 'வ' காராய நமசிவாய

யக்ஷ ஸ்வரூபாய ஜடாதராய
பிநாக ஹஸ்தாய சனாதனாய
திவ்யாய தேவாய திகம்பராய
தஸ்மை 'ய' காராய நமசிவாய

பஞ்சாக்ஷர மிதம் புண்யம் ய: படேத் சிவ சன்னிதௌ
சிவலோக மவாப்னோதி சிவேன ஸஹமோததே

இதி ஸ்ரீமச்சங்கராசார்ய விரசித
சிவபஞ்சாக்ஷர ஸ்தோத்ரம்
ஸம்பூர்ணம்.

# சிவபஞ்சாட்சரம்

# விஸ்வநாத அஷ்டகம்

கங்கா தரங்க ரமணீய ஜடாகலாபம்
கௌரி நிரந்தர விபூஷித வாமபாகம்
நாராயண ப்ரிய மனங்க மதாபஹாரம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம். 1

வாசா மகோசர மநேககுண ஸ்வரூபம்
வாகீச விஷ்ணு சுர சேவித பாதபீடம்
வாமேன விக்ரஹ வரேண களத்ரவந்தம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம் 2

பூதாதீபம் புஜகபூஷண பூஷிதாங்கம்
வ்யாக்ராஜினாம்பரதரம் ஜடிலம் த்ரிநேத்ரம்
பாசாங்குசா பய வர ப்ரத சூல பாணிம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம். 3



சீதாம்சுசோபித கிரீட விராஜமானம்
பாலேக்ஷணானல விசோஷித பஞ்சபாணம்
நாகாதி பாரசித பாசுர கர்ணபூரம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம். 4

பஞ்சானனம் துரித மத்த மதங்க ஜானாம்
நாகாந்தகம் தனுஜ புங்கவ பன்னகானாம்
தாவாநலம் மரண சோக ஜராடவீனாம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம். 5

தேஜோமயம் சகுண நிர்குண மத்விதீயம்
ஆனந்த கந்த மபாரஜித மப்ரமேயம்,
நாகாத்மகம் சகல நிஷ்கல மாத்ம ரூபம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம். 6

ராகாதி தோஷ ரஹிதம் ஸ்வஜநானுராகம்
வைராக்ய சாந்தி நிலயம் கிரிஜா சஹாயம்
மாதுர்ய தைர்ய சுபகம் கரளாபிராமம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம். 7

ஆசாம் விஹாய பரிஹ்ருத்ய பரஸ்ய நிந்தாம்
பாபே ரதிம் ச சுநிவார்ய மன ஸ்ஸமாதௌ
ஆதாய ஹ்ருத் கமல மத்ய கதம் பரேசம்
வாராணசீபுரபதிம் பஜ விஸ்வநாதம். 8

வாராணசீபுர பதே: ஸ்தவனம் சிவஸ்ய
வ்யாக்யாத மஸ்டக மிதம் படதே மனுஷ்ய:
வித்யாம் ச்ரியம் விபுல சௌக்ய மனந்தகீர்த்திம்
சம்ப்ராப்ய தேஹ விலயே லபதே ச மோக்ஷம்.

விச்வநாதாஷ்டகமிதம் ய: படேத்சிவஸந்நிதௌ
சிவலோக மவாப்நோதி சிவேந ஸஹ மோததே




# சிவாஷ்டகம்

தஸ்மை நம: பரமகாரணகாரணாய
தீப்தோஜ்ஜ்வல ஜ்வலித பிங்கள லோசநாய
நாகேந்த்ர ஹார க்ருத குண்டல பூஷணாய
ப்ரஹ்மேந்த்ர விஷ்ணு வரதாய நமசிவாய 1

ஸ்ரீமத்ப்ரஸந்ந ஸஸிபந்நக பூஷணாய
ஸைலேந்த்ரஜா வதந சும்பிதலோசநாய
கைலாஸ மந்தர மஹேந்த்ர நிகேதநாய
லோகத்ரயார்தி ஹரணாய நமசிவாய 2

பத்மாவதாத மணிகுண்டல கோவ்ருஷாய
க்ருஷ்ணாகருப்ரசுர சந்தந சர்சிதாய
பஸ்மாநுஷக்த விகசோத்பல மல்லிகாய
நீலாப்ஜகண்ட ஸத்ருஸாய நமசிவாய 3

லம்பத் ஸபிங்கள ஜடா முகுடோத்கடாய
தம்ஷ்ட்ராகராள விகடோத்கட பைரவாய
வ்யாக்ராஜிநாம்பரதராய மநோஹராய
த்ரைலோக்யநாத நமிதாய நமசிவாய 4

தக்ஷப்ரஜாபதி மஹாமக நாசநாய
க்ஷிப்ரம் மஹாத்ரிபுர தாநவ காதநாய
ப்ரஹ்மோர்ஜிதோர்த்வக கரோடி நிக்ருந்தநாய
யோகாய யோகநமிதாய நமசிவாய 5

ஸம்ஸார ஸ்ருஷ்டி கடநா பரிவர்தநாய
ரக்ஷ: பிஸாச கணஸித்த ஸமாகுலாய
ஸித்தோரக க்ரஹ கஜேந்த்ர நிஷேவிதாய
ஸார்தூளசர்மவஸநாய நமசிவாய 6

பஸ்மாங்கராக க்ருதரூப மநோஹராய
ஸௌம்யாவதாத வநமாச்ரித மாச்ரிதாய
கௌரீகடாக்ஷ நயநார்த நிரீக்ஷணாய
கோக்ஷீர தார தவளாய நமசிவாய 7

ஆதித்ய ஸோம வருணாநில ஸேவிதாய
யஜ்ஞாக்நிஹோத்ர வரதூம நிகேதநாய
ருக்ஸாமவேதமுநிபி: ஸ்துதிஸம்யுதாய
கோபாய கோபநமிதாய நமசிவாய 8

சிவாஷ்டக மிதம் புண்யம் ய: படேத் சிவ சன்னிதௌ
சிவலோக மவாப்னோதி சிவேன ஸஹமோததே
இதி ஸ்ரீமச்சங்கராசார்ய விரசித சிவாஷ்டகம்
ஸம்பூர்ணம்.

திருமலையில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு அமைக்கப்பட்ட மலர் அலங்காரங்கள். 30-12-2025 அன்று பக்தர்களின் வெள்ளத்தின் நடுவில் உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி தங்கத் திருத்தேரில் எழுந்தருளிய திருக்காட்சி. அதுபோது தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள் சிறப்பு ஏற்பாடுகளை குறித்து பக்தர்களிடையே கருத்துக்களை கேட்டறிந்தபோது. 31-12-2025 துவாதசியன்று சக்கரஸ்நானத்தின்போது புனித நீராடிய தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.அனில்குமார் சிங்கால் ஐ.ஏ.எஸ். அவர்கள்


















# சிவராத்திரியும் திருவாசகமும்

- முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை, 94445 82856

### அமைச்சர் மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனிடம் அமைச்சராகிப் பணியாற்றி வருங்கால், அரசியல் செயல்களுக்கு திருப்பெருந் துறை என்னும் திருத்தலத்திற்குக் குதிரைகள் வாங்க வந்தனர். தற்போது ஆவுடையார் கோயில் என்றழைக்கப்படுகிறது.

### சிவஞான தரிசனம்

சிவபெருமானது திருவருளால் அங்கே இருந்த ஒரு குருந்தமரத்தின் நிழலில், சிவகணங்களாகிய மாணவர்கள் சூழ, இறைவன் ஞான ஆசிரியனாக எழுந்தருளியிருக்கும் அரிய காட்சியைத் தம் கண்குளிரக் கண்டார். கண்டதும் மின்சாரச் சக்தியால் ஈர்த்தது போல உணர்ந்து, தன்வசம் இழந்து, வணங்கி நின்று, கண்ணீர் வடித்து, “குருபரன் ஆகி வந்து என்னை ஆட்கொண்ட கோவே! குலமுதலே! குணக் குன்றே, நின்ற எம் நெஞ்சத்துள் நிறைந்த இறைவனே” என்று தொழுது பரவிப் போற்றி நின்றார்.

### உருகிப்பாடும் உத்தமர்

மாணிக்கவாசகர் அரசியற் பணிகளை மறந்தார். தம் மெய் உணர்வில் பொங்கி எழுந்த கனிந்த பேரன்பில், ஆண்டவனைக் கண்டும் அனுபவித்தும், உணர்ந்த உண்மை களைக் காட்டிக் கல்லும் கரையும்படி உருகிப் பாடியருள ஆரம்பித்தார்.

மணிவாசகரின் திருவாசகத்தை உரிய இசையோடு பாடினாலும், இசை இன்றி உள்ளம் உருகிப் பாடினாலும் “திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்” என்ற பழமொழியின் இலக்காவர்.

### பரவசப் பாடல்கள்

மணிவாசகரின் பாடல்கள் அத்தனையும் மாணிக் கங்கள். தெய்வ நலங்கனிந்த சொற்களாலும், சொற் றொடர்களாலும் அமைந்தவை. இனிமையும், எளிமை யும், ஆழமும் உடையனவாகும். மெய்யன்புடன் ஓதுவார், கேட்பார், உணர்வார் எல்லோரையும் மிக்கப் பேரின்பத்தில், பரவசப்படுத்தும்படிச் செய்ய வல்லன.

*மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து*
*உன் விரையார் கழற்கு*
*என் கைதான் தலைவைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பி யுள்ளம்*
*பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி*
*சயசய போற்றி என்னும்*
*கைதான் நெகிழவிடேன் உடையாய்*
*என்னைக் கண்டுகொள்ளே*

இப்பாடல் ஒன்றே மணிவாசகப் பெருந்தகை யின் உருக்காட்சியையும், இறைவனது அருட் காட்சியையும் காட்டும் பெரிய சான்றாகும்.

### திருவாசகத்தேன்

தேன் உடல்நோயை நீக்கி, உலகின்பத்தைக் கொடுக்கக் கூடியது. திருவாசகம் என்னும் தேனோ உயிர் நோயாகிய பிறவித்துன்பத்தை நீக்கிப்

பேரின்ப வீட்டின்பத்தைத் தரவல்லது. தேனின் சிறப்பு அது உண்டாகிய இடத்தைப் பொறுத்தது. திருவாசகமோ மணிவாசகரின் அவரது திருவாய் மலரில் தோன்றியமையால் மிகவும் சிறப்புடையது. அதனால்தான் உலகோர் "திருவாசகத் தேன்"என்று மொழிவர்.

### பக்தி அனுபவ வெளிப்பாடு

மாணிக்க வாசகரின் பக்தி அனுபவ வெளிப்பாட்டில் வந்த அத்தனைப் பாடல்களும் மனதை உருக்கும் தன்மையன. ஆவுடையார் கோயிலில் இறைவனைக் குருபரனாகக் கண்ட அந்தக் கணத்தில் அவரது திருவாயிலிருந்து,

*நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க*
*ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க*

என்று தொடங்கும் சிவபுராணம் இறைவனது பெருமைகளைக்கூறி இறைவனது திருவடிகளைப் பற்றிக் கொண்டு பக்தி அனுபவத்தில் நம்மைத் திளைக்கச் செய்பவையாம்.

### அவனருளாலே அவன்தாள் வணங்கி

இறைவனது திருவருள் இருந்தால்தான் அவனது திருவடிகளை நம்மால் வணங்க முடியும் என்பதையும், "இறைவன் தாயிற் சிறந்த தயாவான தத்துவன், மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடர், பெருங்கருணைப் பேராறு, ஆராவமுதன்" என்று இறைவனை அடையாளப் படுத்தி நமக்கு அடைக்கலம் கொடுக்கும் உண்மைப் பொருள் அவனே என்பதை திருவாசக நூல் முழுமையிலும் தெளிவு படுத்துகிறார் மணிவாசகப் பெருமான்.

### அறிவியலை விஞ்சும் மெய்ஞ்ஞானம்

அறிவியல் உலகம் சொல்லும் முன்பாகவே மணிவாசகர்,

*அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்*
*அளப்பருந் தன்மை வளப்பெரும் காட்சி*
*ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்*
*நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன*

என்று திருஅண்டப்பகுதியில் இவ்வுலகம் தோன்றிய முறையைக் கூறிவிட்டார்.

### உயிர்களின் பரிணாம வளர்ச்சி

உலகில் உயிர்களின் பரிணாம வளர்ச்சியை,

*"புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப்*
*பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்*
*கணங்களாய், வல்லசுரராகி, முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப்*
*பிறப்பும் பிறந்து இளைத்தேன்"* என்று அருளினார். அறியாமையில் கிடந்து உழலும் நாம் எப்படி இறைவனை அடைய முடியும்? தன்னுடைய வெளிப்பாடாகவே பாடுகிறார்.

*யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்*
*ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே*
*தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்*
*மானே அருளாய் அடியேன் உனைவந்து உறுமாறே*

என்பது நமக்கு வழிகாட்டும் பாடல். இன்னொரு பாடலில், படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் ஒரு சேரப் பதிவு செய்து, இறைவனது திருவடியின் பெருமையைப் பறைச் சாற்றுகிறார்.

*போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்*
*போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்*
*போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்*
*போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்*
*போற்றி மால்நான்முகனும் காணாத புண்டரிகம்*
*போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்*
*போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்*

இறைவனின் மாட்சிதனை அவனது திருவடி மலர்களின் பெருமைகளை ஒரே பாடலில் காட்டியுள்ளமை உணர்ந்து மகிழத்தக்கதாகும். மேலும், திருவாசகம் பக்தி நெறியின் பல நிலைகளான இரக்கம், அன்பு, உண்மை, சீவகாருணியம் போன்றவற்றை மிகவும் எளிதாக எடுத்துக் கூறும் நூல் ஆகும். திருவாசகம்தான் சைவ சமயத்தின் உயிர்நாடியாகப் போற்றப்படும் நூலாகும். திருவாசகம் என்பது பக்திப்பாடல்களின் தொகுப்பு அல்ல. அது ஆன்மாவின் ஆழத்திலிருந்து வெளிவரும் இறையனுபவத்தின் வெளிப்பாடு ஆகும். ஞானத்தையும் பக்திப் பரவசத்தையும் ஒன்றாக அள்ளித்தரும் சிவதானக்கலை கருவூலம்.

## மகா சிவராத்திரி

அறியாமை என்னும் இருளை நீக்கிச் சிவ பெருமானை நினைத்து இரவெல்லாம், விழித்து இருந்து வழிபடும் நாள் சிவன் ராத்திரியாகும். இந்த நாளில், சிவபெருமானின் கருணை, தியாகம் மற்றும் அவனிடத்தில் நாம் செலுத்தும் பக்தி ஆகியவற்றைக் கருதிப் பார்த்து, உண்மையாகவே நாம் பக்தி என்னும் வலையில் ஆட்படுவதற்கு நமக்குக் கிடைத்தப் புண்ணிய நூல்தான் திருவாசகம் ஆகும்.

இத்திருவாசகத்தின் மூலமே மாணிக்கவாசகர் சிவ பெருமானுடன் முழுமையாக ஐக்கியமானார் என்பது வரலாறு. ஆகவே, மகா சிவராத்திரி இரவில் திருவாசகத்தைப் பாடுவது என்பது, நம்மையும் சிவனோடு ஐக்கியமாக்கும் என்ற உணர்வின் அடிப்படையில் சிவராத்திரி நாளில் உருகிப் பெருகிப் பாடினால் பிறந்ததன் பயனை எளிதில் அடையலாம் என்பது வழிவழி நம்பிக்கை.

சிவராத்திரி நாளில் பலரும் கூட்டுப் பாராயண மாகத் திருவாசக முற்றோதலும் செய்வோம். திருவாசகம் தொடர்புடைய சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்வோம்.

வள்ளல் பெருமான், திருவாசகத்தில் தோய்ந்த அருளாளர். ***"வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை நான்கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து, பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"*** என்று அருளியிருப்பதும் திருவாசகத்தின் உயிர் அனுபவம் ஆகும்.

## திருக்காளஹஸ்தியில் சிவனிரா

தமிழ்நாட்டின் எல்லாத் திருக்கோயில்களிலும் சிவனிராக் காலத்தில் திருவாசகம் பாடப் பெறுவது போலவே திருக்காளத்தியிலும் மிகச்சிறப்பாக திருவாசகமும் ஆடலுடன் பாடி மகிழும் அடியார் களைக் காண்கிறோம். சிவபெருமான், சிவனிரா நாளில் அடியார் திருவாசகம் பாடித் திளைக்கும் போது, பால் நினைத்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து, ஊனினையுருக்கி, உள்ளொளிப் பெருக்கி, உவப்பிலா ஆனந்தமாய்த் தேனினைச் சொரிந்து, நிற்கும் நிலையை நோக்கி அவன் திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டால் நம்முடைய பிறவிப் பிணி தீர்த்துப் பேரருள் பொழிவான் என்பதல்லவா நம் அடியார்களின் நம்பிக்கை.

***நானேயோ தவஞ்செய்தேன்? "சிவாயநம" எனப் பெற்றேன், தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவ பெருமான், தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான், வானாகும் உயிர்வாழ்க்கை, ஒறுத்தன்றே? வெறுத்திடவே***

"சிவாயநம" என்று சொன்னாலே அவன் செய்யும் வித்தைகளைக் காண்கிறோம்.

ஆகவே பேரின்ப முக்தி வீட்டிற்குக் கலங்கரை விளக்கமாகத் திகழும் திருவாசகம் என்னும் அருள் நூலின் துணைகொண்டு சிவனிரா நாளில் திக்குத் தெரியாமல், தத்தளியாமல் சிவபெருமான் திருவருளைப் பெறுவோம்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையானின் அக்ஷர தீபிகை**

# ஸப்தகிரி



மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர் களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.

# தைப்பூசத் திருவிழா

புலவர் க. சுகுமாரன், மன்னார்குடி

**தை**ப்பூசம் என்றதும் அனைவரது நினைவில் வருவது இரண்டு இடங்கள். ஒன்று பழனி. மற்றது வடலூர். பழனியில் தைப்பூச காவடி சிறப்பும், வடலூரில் தைப்பூச ஜோதி தரிசனக் காட்சியும் பெருமைக்கு உரியன.

மாதந்தோறும் வரும் பூசம் நட்சத்திர நாள் அன்று வடலூரில் தரிசனம் உண்டெனில் அது தைப்பூசத்திற்கு உரிய பெருமை பெற்றது. இந்த வகையில் இவ்விரு ஊர்களிலும் கொண்டாடும் தைப்பூச காரணங்கள் மிகச் சிறப்புக்கு உரியன.

1873ஆம் ஆண்டுக்கு நிகரான ஸ்ரீ முக ஆண்டு ஐப்பசி திங்கள் ஏழாம் நாள் புதன்கிழமை காலையில் வடலூர் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் இருந்த அன்பர்களுக்கு வள்ளலார் உபதேசம் செய்தார். விளக்கை அறைக்கு வெளியே வைத்து அன்பர்களிடம் உங்களுடைய காலத்தை வீணாகக் கழிக்காமல் *''நினைத்து நினைத்து உணர்ந்து உணர்ந்து''* என்ற பாசுரத்தில் கண்டபடி இத்தீபத்தில் இறை பாவனையைச் செய்யுங்கள் என்று கூறி அறைக் கதவை மூடிக்கொண்டு இறைவனோடு இரண்டற கலப்பதற்கான சாதனையில் ஈடுபட்டார். இந்நிலையிலேயே மார்கழி மாதமும் கழிய, தைத்திங்கள் வந்ததும் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை பூசம் நட்சத்திரத்தில் நிறை நாள் காயும் பௌர்ணமி அன்று அறையை விட்டு வெளியில் வந்து அன்பர்களிடம் இன்று உடலை மறைத்துக் கொள்ளப் போகிறேன். அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரை வழிபட்டு உய்யுங்கள் எனக் கூறியபடி கதவைத் திருக்காப்பிட்டவாறு சோதியில் இரண்டறக் கலந்தார். இதை உறுதிப்படுத்துமாறு அவரது அருட்பாவின் இறுதிப் பாடல் உள்ளதாக ஊரான் அடிகள் எழுதியுள்ள "அடிகள் வரலாறு" எனும் நூலில் மூன்றாம் பதிப்பு, பக்கம் 119 முதல் 120 வரை காணப்படுகிறது.

### சோதியை வழிபட்டவர் சோதி மயமானார்

ஆண்டவனை ஜோதி வடிவமாகக் காணும் வழிபாடு இந்திய கோட்பாடு. வடநாட்டு வேள்விச் சடங்கில் நெருப்பு வடிவமாக கடவுளைப் போற்றுவது வழக்கம். சிவனுக்கு சூரியனும் சந்திரனும் இரு கண்கள். ஆயினும் அக்னியை நெற்றிக் கண்ணாகக் கூறுவது வழக்கமாகும். ஒளிமயமான இம்மூன்றும் இருளை நீக்கி வெளிச்சத்தைத் தரத்தக்க புற இருளைப் போக்கும். நீ வெளிச்சத்தைப் போல் அறியாமை ஆகிய அக இருளில் இருந்து ஆன்மா இறைவனாகிய வெளிச்சத்தில் ஐக்கியமாகும் போது உய்தி பெரும் என்பது தத்துவமாகும். இந்த அடிப்படையில் தான் வள்ளலார் அருட்பா அருள் விளக்கமாலையில் ஆண்டவனை *''அருள் விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே''* என்று கூறி வழிபடுகிறார்.



## புஷ்கரணி ஸ்நானம் செய்யும் பக்தர்கள் கவனத்தில் வைத்து கொள்ள வேண்டிய விஷயங்கள்

- திருடர்கள் உள்ளனர் ஜாக்கிரதை.
- பக்தர்கள் தம் குழந்தைகளோடு உடைமைகளையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- புஷ்கரணியில் நீராடும் போது சோப்பு, சாம்புகளை பயன்படுத்துதல் கூடாது.
- புஷ்கரணியில் துணியைத் துவைத்தல் கூடாது.
- புஷ்கரணியில் நீச்சல் அடித்தல் கூடாது.
- புஷ்கரணி மற்றும் சுற்றுப்புறத்தினைத் தூய்மையாக வைத்தல் வேண்டும்.
- ஈரமான ஆடையுடன் ஆலயத்திற்குள் நுழையாதீர்கள்.
- உலர்ந்த ஆடை அணிந்து மட்டுமே ஆலயத்திற்குள் நுழைதல் வேண்டும்.
- காணிக்கை மற்றும் முடிப்புகளை உண்டியில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.



*''அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி''* என்பதே வள்ளலாரின் தாரக மந்திரம். மாணிக்கவாசகர் **''சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே''**எனப்பாடி இறைவனைக் கண்டார். வள்ளலாரும் விளக்கு, சுடர், சோதி என்கிறார். இருவரும் ஒரே பரம்பொருளைச் சுட்டுவதாயினும் கூறும் முறையில் வேறுபாடின்றி கருத்தில் வேறுபாடு இல்லை. சிறு வெளிச்சம் – சுடர், பெரு வெளிச்சம் –சோதி, அண்ட பெருவிளக்கு–அகண்ட பெருவிளக்கை பேரொளி எனலாம். இப்பேரொளி யில் ஐக்கியமானவர் வள்ளலார்.

அவரது வாழ்க்கையின் தொடக்க நிலையில் விளக்கு தான் அவரை படிப்படியாய் பேரொளி வாழ்க்கைக்கு அடையாளம் காட்டி அழைத்துச் சென்றது. அவர் கருங்குழி என்ற ஊரில் வாய்ந்த போது தண்ணீரில் விளக்கு எரித்துக் காட்டினார். இதனை "சென்னை நண்பர்களே செப்பக்கேளீர். தண்ணீர் விளக்கும் எரிந்தது சன்னிதியின் முன்னே" என்று அருள் நிலை விளக்கம் என்ற பகுதியில் பாடியுள்ளார். மேலும், அவர் திருமணம் கொண்ட முதல் இரவில் விளக்கொளியில் திருவாசகம் படித்து உள்ளொளியைப் பெருக்கிக் கொண்டார் என்பது அவரது வரலாற்றின் முக்கியச் செய்தியாகும். இப்படியாக விளக்கிலிருந்து அறிவுச்சுடரை விசாலப் படுத்திய அளவில் வள்ளலார் இறுதியில் சோதிப் பிழம்பானார். இந்த அனுபவத்தைத்தான் அவர் குறிப்பாக ஆண்டவனை, *''விளக்கே, சுடரே, சோதியே''* என்றார்.

மணிவாசகர் தில்லை அம்பல ஜோதியில் ஐக்கியமானாலும் முதன் முதலில் அவர் இறைவனை திருப்பெருந்துறையில் சோதி மயமாகத் தரிசித்தார்.

*''செந்தழல் புரை திருமேனியும் காட்டி''* என்பது அவரது வாக்கு. மேலும், குதிரை வாங்க வந்த வாதவூராருக்கு ஜோதி தரிசனம் காட்டி ஆட்கொண்ட அற்புதத்தோடு ஆண்டவன் அவரை தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொள்ளவில்லை. உடனிருந்த அன்பர்களை ஜோதியில் ஐக்கியப்படுத்திக் கொண்டாலும் **''கோலமார் பொதுவினில் வருக என கூறி''**, **''என்னை இருப்பதாக்கினன்''** என முறையே கீர்த்தி திருஅகவலிலும் (128), திருவண்டப் பகுதியிலும் (179) மணிவாசகர் கூறுவதில் இருந்து தம் வாழ்வை தொடங்கினார் எனத் தெரிகிறது.





இப்படியாக அவரவர் வாழ்வின் அனுபவத்திற்கேற்ப இறைவனை அனுபவிக்கும் போது மணிவாசகர் சோதி, சுடர், விளக்கு என்றது ஒரு வகையான இறங்குமுறை குறிப்பு.

வள்ளலார் "விளக்கு, சுடர், சோதி" என்றது ஒரு வகையான ஏழு முறை குறிப்பு. வர்ணனையின் போது பாதாதி கேசம் கேசாதி பாதம் என்பார்களே அதைப்போல இவற்றைக் கொள்ளலாம். ஆறுகள் எல்லாம் ஒன்றாகக் கூடி கடலில் கலப்பதில்லை. அவை தனித்தனியே கடலைச் சென்றடைவது போன்று உண்மையில் வள்ளலாரும் மணிவாசகரும் சோதியை அனுபவித்தனரே அன்றி அவர்களுள் மாறுபாடு இல்லை எனலாம்.

மேற்படியான இருவேறு வகைப்பட்ட கருத்தின் பொருத்தத்தை கார்த்திகை தீபக் காட்சியை கந்தப்பெருமான் அவதாரத்தோடு இணைத்தும் உணரலாம். கார்த்திகை தீப நாளில் வீடுகள் தோறும் பெண்கள் விளக்கேற்றுவர். இன்று மாலையில் கீழ் வானத்தில் முழு நிலவான சுடர் தோன்றும். அதே நேரத்தில் திருவண்ணாமலையில் சுடர், சோதி என்ற படிப்படியான நிலையில்தான் வடலூர் வள்ளல் பெருமான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் உடன் கலந்தது தைப்பூசத்தின் முழு நிலவான வான்சுடர் தோன்றும் நாளில் வடலூர் சத்திய ஞான சபையில் ஏழு திரை நீக்கி காட்டும் விளக்கொளியில் கண்டு தரிசிக்கிறோம். இவ்வுண்மையை கந்தபுராணம் முருகரின் அவதாரமாகக் காட்டுகின்றது.

*அருவமும் உருவமும் ஆகி*
*அனாதியாய் பலவாய் ஒன்றாய்*
*பிரம்மமாய் நின்ற சோதிப்*
*பிழம்பதோர் மேனியாகக்*
*கருணைகூர் முகங்கள் ஆறும்*
*கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே*
*ஒரு திருமுருகன் வந்தாங்கு*
*உதித்தனன் உலகம் உய்ய*

சிவபெருமானாகிய சோதிப்பிழம்பு தன் நெற்றியின் அக்னி சுடரிலிருந்து முருகனாகிய தீப்பொறியை உண்டாக்கியது. இதில் சோதியும் சுடரும், தீப்பொறியும் ஒன்றே. இந்த முருகனாகிய பொறிதான் அடியார் உள்ளத்தில், *"மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்"* உள்ளான்.

இங்கே கூறிய ஒளியை மணியின் ஒலியாகவும், விளக்கின் ஒளியாகவும் கொள்ளலாம். இப்படி சோதிக்கும் முருகனுக்கும் தொடர்பு இருப்பதால்தான் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் உத்தராயணத் தொடக்கமாகிய தைத்திங்கள் முழு நிலா நாளை முருகனோடு சேர்த்து கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது எனலாம்.

மேலும், தைப்பூசத்தன்று தேவலோக ஞான ஆசிரியராகிய வியாழ பகவானிடம் (பிரகஸ்பதி) முருகன் ஞானோபதேசம் பெற்று ஞானப் பண்டிதனாக ஆனான் என்று பழனி தலபுராணம் கூறுகிறது. இதனையே *"ஞான பண்டித சுவாமி நமோ நம"* என்கிறார் அருணகிரிநாதர். அறிவுத் தெளிவே (பிரகாசம்) ஞானம். அதன் விளக்கமே நிறைமதி நன்னாள். அதைப் பெற முயலும் கொண்டாட்டமே தைப்பூசப் பெருவிழாவாகும்.

**தைப்பூச திருநாளில் கந்தன் கயல் அடி பணிவோம்!**
**எண்ணியன யாவும் ஈடேரப்பெற்று இன்புறுவோம்!!**



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

**தெலுங்கு மூலம் :**
**பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.**
**தமிழாக்கம் :**
**டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.**

*டிசம்பர் மாத இதழின் தொடர்ச்சி...*

ஸ்ரீஹரிதான் இனி தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்னும் எண்ணத்துடன் மாதவன் அவ்வழியாக வந்த அடியார்கள் கூட்டத்தோடு தானும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டான். அவர்கள் உண்டு மீதமான எச்சில் உணவைக் கேட்டு வாங்கி உண்டான். உடல் மீது இருந்த பற்றை அறவே விட்டொழித்தான். பின்பு பரிவாரங்கள் எல்லாம் கபில தீர்த்தத்தில் புனித நீராடிக் கொண்டு இருக்க, தானும் நீராட விரும்பினான். அவர்கள் செய்துக் கொண்டது போலவே, தானும் தன்னுடைய தலைமுடியைக் காணிக்கை ஆக்கினான். மேலும், அவர்களைப் போலவே பிண்ட பிரதானங்கள் செய்தான். இதனால் தம் முன்னோர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை நினைத்து அவனும் மனம் மகிழ்ந்தான். இக்கதையைக் குலபுரோகிதனான சதாநந்தன் ஜனகருக்குச் சொல்லிக் கொண்டிருக்க விதேஹாதிபதி ஒரு கேள்வி எழுப்பினார்.

சுவாமி! மாதவன் பாவ காரியம் செய்ததினால் தீவினையாளன் ஆனான். தீவினையாளனான ஒருவன் பித்ரு தேவதைகளுக்குப் பிண்ட பிரதானம் செய்தால் அந்த பித்ரு தேவதைகள் அதை ஏற்று மகிழ்ச்சி கொள்வதென்ன என ஆவலுடன் கேட்டான். ஜனகரின் சந்தேகத்தைத் தீர்ப்பதற்காக புரோகிதன் “ஜனகரே! மாதவன் செய்த காரியங்கள் யாவும் பாவச் செயல்களே. பாவியான அவன் கபில தீர்த்தத்தில் நீராடிய காரணத்தால் அவன் பாவங்கள் யாவும் அழிந்து போயின. அது மட்டுமல்ல தனக்குத் தெரிந்த அளவிலே மிகவும் அக்கறையோடும், விருப்பத்தோடும் பிண்ட பிரதானம் செய்ததால் பித்ரு தேவதைகள் மகிழ்ந்தார்கள்” என்றான்.

மறுநாள் ராஜ பரிவாரங்களோடு மாதவனும் வேங்கடகிரி மலையை ஏறும் போது அம்மலையின் மேல் கால் வைத்தவுடன் அந்த மலையின் மகிமையால் அவனின் பாவங்கள் அத்தனையும் அஞ்சி அலறி ஓடின. வேங்கடகிரியில் உள்ள காடுகளை கண்ணால் கண்ட உடனே அவனுடைய பாவங்கள் யாவும் எரிந்து சாம்பல் ஆயின. இதைக் கண்ட பிரம்மா, வாமதேவர்கள் வியந்து போனார்கள். இவை அனைத்தும் வேங்கடகிரி மலையின் மகிமை என்று சொல்லி வாழ்த்தி பூமாரி பொழிந்தனர். முடிவாக பிரம்மா பூமிக்கு இறங்கி வந்து மாதவனைப் பார்த்து உன்னுடைய பாவங்கள் யாவும் அழிந்தன. விரைவாக வேங்கடகிரி சென்று ஸ்வாமி புஷ்கரணியில் நீராடு. வராக ஸ்வாமியைப் பூஜித்து வணங்கி மனித உடலை விடுவாயாக. அதன் பிறகு பூமியில் நீ பாண்டவ வம்சத்தில் சுபாரனின் மகனாகப் பிறந்து சுதர்மனனுக்கு மிகவும் நெருங்கிய ஆத்ம பந்துவாக இருப்பாய். ஹரி பக்தியில் திளைத்து தொண்டை மண்டலத்தை ஆட்சி புரிவாய். உனக்கு லட்சுமி அம்சத்தில் ஒரு மகள் பிறப்பாள். அவளை ஸ்ரீஹரிக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்து அதன் பிறகு வைகுண்டம் அடைவாய் என்று பிரம்ம தேவர் வரம் அளித்தார்.

வேங்கடாத்ரியைக் கண்களால் காணும் அளவிலேயே நம் பாவங்கள் யாவும் நீங்கிவிடும்.

## குறுக்கெழுத்துப்புதிர் 115க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | 2 ம | லை | ந | ம் | பி | 3 க | ள் | | | மா |
| ரு | | ய | | ன் | | | ம் | 4 ர | ம் | பை | ர் |
| வே | | ன் | ன் | ண | வ | ர | 5 ச | | | | க |
| ங் | | ணா | ண் | வ | ணி | 6 ம | ன் | | ளி | ள் | 7 வ |
| 8 க | ன | க | தா | 9 ரா | ஸ் | தோ | த் | 10 தி | ர | ம் | ஸ் |
| ட | | ன் | ண | ர் | 11 க | டை | ச | ரி | 12 தி | வி | 13 வி |
| ம் | 14 த | வ | 15 ரா | 16 ஜ | ன் | ய | ஜ | 17 வி | | தே | ன |
| | ன | த | மே | | 18 கோ | மா | தா | க் | | கா | ய |
| ழி | ல | 19 மா | ஸ் | | லி | த | 20 மா | கி | | ங் | தே |
| கா | க்ஷ | ரீ | வ | 21 ப | ரி | ம | ள | ர | ங் | 22 க | ய |
| ர் | மி | ச | 23 ர | தி | தே | வி | | ம | | | ன் |
| 24 சீ | | ன் | ம் | ன | ன் | 25 அ | | ன் | | | |

அப்படிப்பட்ட மகிமை உடையது வேங்கடாத்ரி. வேங்கடம் என்றால் ஒருவரின் தீவினைகள் சுட்டெரிக்கும் திருமலை என்று பொருள். எவர் ஒருவர் விடியற்காலையில் வேங்கடாத்ரியைத் தியானிக்கிறார்களோ அவர்களுக்கு நூறு கங்கையில் நீராடிய பலன் கிட்டும். அவர்கள் ஆயிரம் முறை இராமேஸ்வரம் யாத்திரை செய்த புண்ணியம் பெறுவார்கள் என்றார். இவை அனைத்தும் கேட்டுக் கொண்டிருந்த ஜனகர் உடனே வேங்கடாத்ரிக்குப் புறப்பட லானார். அவருடன் அமைச்சர்களை யும், குல புரோகிதர்களையும் அழைத்துக் கொண்டு வேங்கடாத்ரி வந்தடைந்தார்.

ஸ்வாமி புஷ்கரணி யில் புண்ணிய நீராடி அந்தத் தீர்த்தக் கரையில் உள்ள பூவராக ஸ்வாமியை வணங்கி, பிறகு ஸ்ரீநிவாசனையும் வணங்கிய பின்பு சில நாட்கள் அங்கேயே தங்கியிருந்து அதன் பின்பு மிதிலை நகரத்திற்குச் சென்றார்.

வேங்கடாத்ரியைத் தரிசனம் செய்த புண்ணிய பலத்தினால் ஜனக மகாராஜன் தன் மகள் சீதாதேவி திருமணத்தை மிகவும் வைபவத் தோடு எல்லோரும் பெருமைப்படும் வண்ணம் செய்தார். அந்த நேரத்தில் ஊர்மிளாவை லட்சுமணனும், மண்ட வியை பரதனும், ஸ்ருதகீர்த்தியை சத்ருக்கனனும் திருமணம் செய்து கொண்டனர். இவை எல்லாம் வேங்கடாத்ரி மாகாத்மியம் கதையைப் பக்தியோடு கேட்டதனா லேயே உண்டானது என்று ஜனகர் மகிழ்ந்தார்.

இக்கதையை சூத மகரிஷி கூற, சனகாதி முனிவர்கள் “மகாமுனியே! பிரம்மதேவன் திருவேங்கடவனுக்குத் தூய உள்ளத்தோடு திருத்தேர் உற்ச வம் செய்தார் என முன்பு தாங்கள் கூறினீர். தாமரை கண்ணாளன் எவ்வ ளவு காலம் சேஷாதிரி மலை மீது நிவாசம் இருந்தார்” என வினாவினர்.

அதற்கு விடையளிக்கும் முக மாக சூத மகரிஷி “முனிவர்களே! ஸ்ரீ ஹரி கலிகாலம் முடியும் வரை சேஷகிரியிலேயே வீற்றிருப்பார்” என பதில் அளித்தார்.

*பெருமை அறிவோம்...*

### 2026, மார்ச் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 03 | ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, குமாரதாரா தீர்த்த முக்கோட்டி. |
| 15 | ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாக மஹோத்சவம். |
| 17–25 | திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 19 | தெலுங்கு வருட பிறப்பு, 21 மத்ஸ்ய ஜெயந்தி. |
| 24–ஏப்.01 | வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 26–ஏப்.03 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராமஸ்வாமி பிரம்மோத்ஸவம். |
| 27 | ஸ்ரீராமநவமி, கார்வேடி நகரம் ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம். |
| 30–ஏப்.01 | திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம். |
| 31 | ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி கல்யாணோத்ஸவம். |

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**2. அஹோபில நரசிம்மர்**

*ஸ்தானானாமேவ ஸர்வேஷாம் கஜதீர்த்த தடம் சுபம்*
*விதாரயந் ரிபும்ஸ்தத்ர நரஸிம்ஹ: ப்ரகாசதே*
*சக்ராஸநே ஸமாஸீநச் சக்ராத்யாயுத ஸேவித:*
*சக்ர மக்ர மிதாநாம்து வக்ராசய விநாசந:*

*ஸடாச்சடா ஸமாயுக்தோ விதூதா ஸுரமண்டல:*
*தம்ஷ்ட்ரா கராள வதநோ பயாஸ்யாபி பயங்கர:*
*சிததம்போளி பருஷை: நகைர்விலும் பிதாஸுர:*
*பாலேக்ஷண ஸமுத்பூத வஹ்நிநா தாருணாத்மநா*

*அப்ரமேயக்ருதாகார: த்ரிலோகம் நிர்த்தஹந்நிவ*
*பக்தா நுகம்பயா நித்யம் பாவிதாம் ருத வீக்ஷண:*
*அக்ரேப்ராஞ்சலி மாஸீநம் ப்ரஹ்லாதம் ப்ரியபூரிதம்*
*ப்ரேம் ணாநுக்ருண்ணன் ஸத்பக்தம் ஸமர்த்யாஸ் தேதி ஹர்ஷித:*

*இதம்துப்ரதமம் ஸ்தானம் ப்ரஹ்யாதிபிருபாஸிதம் ந்ருஸிம்ஹரஹிதம்*
*சேஷத்ரம் நபூதம் நபவிஷ்யதி*

இந்த நரசிம்மன் சந்நிதிக்கு அருகில் உள்ள சிறிய அறையில், ஒரு சிவலிங்கமும் நரசிங்கப் பெருமானும் உள்ளனர். இந்த இடம்,சிங்கப்பிரானின் அடியவராகிய ஸ்ரீஆதிசங்கரருக்கு எம்பெருமான் அருளிய இடம் என்பர்.

**3. மாலோல நரசிம்மர்:**

*வேதாத்ரே சிகரே ரம்யே லக்ஷ்மீ க்ஷேத்ர முதாஹ்ருதம்*
*தத்ராஸ்தே பகவான் விஷ்ணுர் லக்ஷ்ம்யா ஸஹ ந்ருகேஸரீ*
*ஸ்ரீகாமாயே நராலோகே ஸம்பதம் வாஸு ரேசதாம்*
*லக்ஷ்மி ந்ருஸிம்ஹ மந்த்ரம்து அஷ்டாக்ஷர ஸமந்விதம்*
*ஜபந்தே மாஸ ஷட்கம்து ஹவிஷ்யாந்ந முபாச்ரிதா:*
*தேப்ராப்நுவந்தி விபுலாம் ச்ரியம் வாயத பீப்ஸிதம்*

**4. க்ரோடா நரசிம்மர்** (வராக நரசிம்மர்)

*வாராஹம் ரூபம்ஆஸ்தாய தத்தே*
*ஜாயாம் வஸுந்தராம்*
*வேதாத்ரே: ப்ருஷ்டபாகேது ஸ்தித்வா தேவஸநாதன:*
*வராஹரூபீ பகவாநத்ராஸ்தே மது சூதன:*
*வாராஹம் க்ஷேத்ரம் உத்திஷ்டம் க்ஷேத்ராணம் உத்தமோத்தமம்*



### 5. காரஞ்ச நரசிம்மன்:

*கரஞ்சமூலே பகவாந் யத்ராஸ்தே சார்ங்க சக்ரத்ருத்*
*காரஞ்சம் க்ஷேத்ரம் உத்திஷ்ட மாச்ரிதம் பவநாசி நீம்*
*ஏஷாம் ஸ்நாநரதி: காம்க்ஷா, ஏஷாம் வைக்ஞான நிச்சயே*
*தத்ததிஷ்ட பலம்ப்ராதாத் பகவாத் நரகேஸரீ*

இந்த சந்நிதி, கீழ் அஹோபிலத்தில் இருந்து, மேல் அஹோபிலம் செல்லும் வழியில் பவநாசினி என்னும் புனிதத் தீர்த்தக்கரையில் அமைந்துள்ளது.

### 6. பார்க்கவ நரசிம்மன்:

*பார்க்கவாக்யம் மஹாக்ஷேத்ரம்*
*புண்யஸ்வர்காபவர்கதம்*
*தத்ரை வஹ்ய: க்ஷயம் தீர்த்தம் ரக்ஷகம் புவனஸ்யச*
*தத்ராஸ்தே பகவாந் சைலேஹ்விதுரே ந்ருகேஸரீ*

### 7. யோகானந்த நரசிம்மன்:

*வேதாத்ரே: பச்சிமே பாகேலக்ஷ்மீ ஸ்தாநாத் ஸமீபத:*
*தக்ஷிணாபிமுகோ தேவோ யோகனந்த ந்ருகேஸரீ*
*யோகாப்யாஸம்து க்ருதவான் ப்ரஹ்லாதஸ்ய மஹாத்மந:*
*ததாப்ரப்ருதி லோகாஸ்தம், யோகானந்த இதிப்ருவந்*



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*உபாதி$_3$சத்ஸ த்ரிஸஹஸ்ரக$_3$ாத$_2$ாஸ்தத்$_3$*
*வ்யாஸஸூத்ரார்த்த$_2$மபி ப்ரஹ்ருஷ்ட:।*
*ராமாநுஜார்யச்ச கு$_3$ரும் ஸத$_3$ாரமபூஜாயந்*
*நித்யமபீ$_4$ஷ்டவ்ருத்யா ॥* (47)

மிகவுகந்த பெரியநம்பி, நாலாயிர திவ்ய பிரபந்தங்களில் முதல் மூன்று ஆயிரங் களையும், வியாசருடைய ப்ரஹ்ம ஸூத்ரங் களின் பொருளையும் இராமாநுஜருக்கு உபதேசித்தார். மனைவியோடு கூடிய அவரை இராமாநுஜரும் அவருகந்த கைங்கர்யங் களைச் செய்து ஆராதித்து வந்தார்.

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

### 8. சத்ரவட நரசிம்மன்:

*ததா சத்ர வடம் க்ஷேத்ரம் ஸூத்ராமாதிபிராச்ரிதம் யத்ராஸ்தே பகவாந்*
*ப்ராசீமநுக்ருண்ணணம்ஸ்துகேஸரி*

### 9. பாவன நரசிம்மர்:

*கருடாத்ரேர் தக்ஷிணத: பாவனம் நாம தீர்த்தகம்*
*தத்ராஸ்தே பகவாந் விஷ்ணுர் ந்ருஸிம்ஹஸ்ய ஸ்வரூப த்ருத்*
*ஸம்ச்ரீதானாம்து ஐந்தூநாம் அபீஷ்டார்த்த ப்ரதாயக:*

தினமும், நவநரசிம்மர்களையும் தியானம் செய்ய வேண்டிய சுலோகம்.

*பஷீந்த்ரம் ப்ரோத்ரஸம்ஜ்ஞம், ஜலநிதித நயா ஸம்ஜ்ஜிதம் யோக ஸம்ஜ்ஞம்.*
*காரஞ்ஜம் க்ஷேத்ர வர்யம் பலித பலசயம் சத்ரபூர்வம் வடம்ச*
*ஜ்வாலாக்யம், பார்க்கவாக்யம். பகவதபிமதம் பாவிதம்*
*யோகிவர்யை: புண்யம்தத் பாவனாக்யம் ஹ்ருதிச கலயதாம் கல்பதே ஸத்பலாய*

### சிறப்புகள்:

இது ஸ்வயம் வக்த க்ஷேத்ரங்களில் சேர்ந்தது. ஸ்ரீமுஷ்ணம், திருப்பதி, சாளக்கிராமம், தோத்தாத்ரி, புஷ்கரம், பத்ரிகாச்ரமம், ஸ்ரீரங்கம், வ்ருஷபாத்ரி, நாராயணகிரி, அனந்தசயனம், பில்வாசலம், திருக்குறுங்குடி, மலயாசலம், ஹரசாபஹரம், சிம்ஹாத்திரி, அஹோபிலம் என்று பதினேழு தலங்கள். கயை, பிரயாகை. காசி இவைகளைவிட நூறு மடங்கு பெருமையுடன் உள்ள திவ்யதேசம் அஹோபிலம்.

*கயாம் ப்ரயாக காசீப்ய: ஸத்யம் சதகுணாதிகம்*

பித்ரு ச்ராத்தத்துக்கு கயை; உடலைத் துறக்க கங்கைக் கரை; மந்திர உபதேசம் பெற காசி; இந்த மூன்றும் அஹோபிலம் சென்றாலே நிறைவேறும் என்பர்.

வேறு தலங்களில் அதிகமாக அன்னதானம் செய்வதைக் காட்டிலும் அஹோபிலப் பகுதியில் ஒரு கவளம் அன்னம் தானம் செய்வதே மிகச்சிறந்தது. நரசிங்கப்பிரானைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் வேறு இல்லை. பவநாசினி என்ற தீர்த்தத்தைக் காட்டிலும் உயர்ந்த தீர்த்தம் வேறு இல்லை.

கருடாத்ரி என்ற பெயர் பெற்ற அஹோபிலத்தைக் காட்டிலும் உயர்ந்த மலை வேறு இல்லை.

நரசிங்கனிடமும், பவ நாசினியிடமும், அஹோபில மலையிலும் பக்தியுடன் இருப்பவன் சிறந்த யோகி. இதைச் சொல்லும் சுலோகம்,

*ந நாரஸிம்ஹாத் அதிகச்சதேவோ.*
*ந தீர்த்தம் அந்யத் பவநாச ஹேதோ*
*ந காருடாத்ரே: அபரோஸ்தி சைலோ,*
*ந பக்த ஜந்தோ: அபரோஸ்தி யோகி*

ஸ்ரீஉடையவரும், ஸ்வாமி தேசிகனும், மங்களாசாஸனம் செய்த க்ஷேத்ரம். ஸ்ரீராமபிரான் பிராட்டியைப் பறிகொடுத்து நின்ற போது, இந்த ந்ருஸிம்ஹனை ஐந்து சுலோகங்களால் (ந்ருஸிம்ஹ பஞ்சாமிருதம்) மங்களாசாஸனம் செய்து, பிராட்டியை மீண்டும் பெற்றதாக, ஹரிவம்சம் சொல்கிறது.

*கோவிந்த கேசவ ஜநார்தன வாஸுதேவ*
*விச்வேச விச்வ மதுசூதன விச்வரூப*
*ஸ்ரீ பத்மநாப புருஷோத்தம புஷ்கராக்ஷ*
*நாராயணாச்யுத ந்ருஸிம்ஹ நமோ நமஸ்தே*

என்று ந்ருஸிம்ஹனை இராமபிரான் துதிக்கிறார். ஸ்ரீநிவாஸன், பத்மாவதி விவாஹத்தில் எந்த எம்பெருமானை வழிபட்டு பிரசாதங்களை நிவேதனம் என்று பிரம்மா கேட்க, ஸ்ரீநிவாஸன்

*அஹோபில ந்ருஸிம்ஹஸ்ய பூஜாம் க்ருத்வா நிவேதய*
*இத்யுக்தோ வாஸுதேவேந ந்ருஸிம்ஹஸ் யார்ப்பணம் ந்ருப*

என்று கூறி அஹோபிலச் சிங்கப்பிரானை வழிபட்டு, அவருக்கே பிரசாதங்களை நிவேதனமாக அர்ப்பணிக்க வேண்டும் என்று ஆணையிட்டு, அவ்வாறே செய்ததால் வேங்கடவனால் வழிபடப் பெற்ற பெருமையும் கொண்டது இந்தத் திவ்யதேசம்.

**பெருமாள்**

அஹோபில நரசிம்மர், பிரகலாதவரதன். (கிழக்கு நோக்கிய நின்ற நிலையில் சக்ராஸனத்தில் அமர்ந்த திருக்கோலம்)

**தாயார்** : லக்ஷ்மித்தாயார் – அமிருதவல்லித்தாயார், செஞ்சுலக்ஷ்மித்தாயார்.

கீழ் அகோபிலம் – பிரகலாத வரதர் சந்நிதியில், மாலோல உத்ஸவர் தவிர எஞ்சிய எட்டு நரசிம்மர்களின் உத்ஸவ மூர்த்திகளை சேவிக்கலாம்.

1.மாலோல நரசிம்மர் – ஸ்ரீஅகோபில மட ஆராதனை மூர்த்தி, 2.ஜ்வாலா நரசிம்மர், 3.அஹோபில நரசிம்மர், 4.க்ரோடா நரசிம்மர், 5.காரஞ்ச நரசிம்மர், 6.பார்க்கவ நரசிம்மர், 7.யோகானந்த நரசிம்மர், 8.சத்ரவட நரசிம்மர், 9.பாவன நரசிம்மர்.

**விமானம்** : குகை விமானம், குருகை விமானம்.

**4ம்6ம் தீர்த்தம்** : பவநாசினித் தீர்த்தம், பாப விநாச தீர்த்தம், பார்க்கவ தீர்த்தம். இந்திர தீர்த்தம், நரசிம்ம தீர்த்தம், கஜதீர்த்தம்.

**பிரத்யக்ஷம்** : கருடன், பிரகலாதன்,ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன்.

**ஆகமம்** : பாஞ்சராத்ரம்.

**மங்களாசாஸனம்** : திருமங்கையாழ்வார்.

**திவ்யதேச வாழ்த்துப் பாசுரம்**

*புலவெள்ளத்து அழுந்தாது ஐய பரன் எங்கும் உளன், பார!*
*என்னும் தவம் உளசிறுவன் சொல்லை இகழ்ந்து*
*அறைதறியில் அண்டம்*
*புவி பிளந்திடவே தோன்றிப் பொன்னவன் ஆகம் போழ்ந்த*
*வவழ்நாரசிங்கன் அடியிணை வாழி வாழி*

*திருசிங்கவேள் குன்றம் திவ்ய தேச தரிசனம் தொடரும்...*


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்துவதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும்போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். 1800-425-4141 க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்



அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# முதலியாண்டான்

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

இராமானுசர் அவதரித்துப் பத்து வருடங்களுக்குப் பின்பு, ஸ்ரீமுக வருடம் 1027இல் பூவிருந்தமல்லிக்கும் திருமழிசைக்கும் இடையே உள்ள புருஷ மங்கலம், வரதராஜபுரம் என்னும் பச்சை வாரணப் பெருமாள் கோயிலில் சித்திரை மாதம் திங்கட்கிழமை புனர்வஸு நக்ஷத்ரத்தில் இராமானுசரின் மூத்த சகோதரியான பூமி நாச்சியாருக்கும், அனந்த நாராயண தீக்ஷிதருக்கும் திருக்குமாரராய் அவதரித்தவர் முதலியாண்டான் ஆவர். யஜுஸ்சாகை, ஆபஸ்தம்ப ஸூத்ரம், வாதூல கோத்ரத்தில் எம்பெருமானாருடைய மருமகனாகவும், சக்கரவர்த்தி திருமகன் அம்சமாகவும் அவதரித்தவர். தாசரதி என்றும் அழைக்கப் படுவர்.

*அத்திகிரி அருளாளர் அடிபணிந்தோன்வாழியே*
*அருட்பச்சை வாரணத்தில் அவதரித்தான் வாழியே*
*சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன் வாழியே*
*சீபாடியமீடுமுதல் சீர் பெறுவோன் வாழியே*
*உத்தமமாம் வாதூலம் உயிர் அமர்ந்தோன் வாழியே*
*ஊர் திருந்தச் சீர் பாதம் ஊன்றினான் வாழியே*
*முத்திரையும் செங்கோலும் முடி பெறுவோன் வாழியே*
*முதலியாண்டான் பொற்பதங்கள் ஊழிதொறும் வாழியே*

**பதவுரை**

அத்திகிரி அருளாளர் – காஞ்சியிலுள்ள தேவப்பெருமாள், அடி பணிந்தோன் வாழியே – திருவடியைப் பற்றினவர் வாழ வேண்டும்;. அருட்பச்சை வாரணத்தில் – அருள் புரியும் பச்சை வாரணப் பெருமாள் கோயிலில், அவதரித்தான் – அவதரித்தவர்; சித்திரையில் – சித்திரை மாதத்தில், புனர்பூசம் – புனர்வஸு நக்ஷத்ரம், சிறக்க வந்தோன் – பொலிவுபெற அவதரித்தவர்; சீபாடியமீடு முதல் – இராமானுசர் ஸ்ரீபாஷ்யம் அருளிய முதல் கொண்டு, சீர் பெறுவோன் – பெருமை பெற்றவர்;. உத்தமமாம் வாதூலம் – மேன்மையான வாதூல குலம், உயர வந்தோன் – உயர்ந்த நிலையை அடையச் செய்தவர்; ஊர் திருந்த – ஸ்ரீசாளக்ராமம் என்ற ஊர் மக்கள் திருந்த, சீர் – பெருமை பொருந்திய, பாதம் – திருவடிகளை, ஊன்றினான் – பதித்தவர்; முத்திரையும் – இராமானுசருடைய அடையாளமான பாதுகையும், செங்கோலும் – கோயில் நிர்வாகத்தையும், முடி பெறுவோன் – தன் முடியில் பெற்றவர்; முதலி ஆண்டான் – சீடர்களை நிர்வகிப்பவரில் முதல்வர் ஆனவர்; பொற் பதங்கள் – அழகிய திருவடிகள், ஊழி தொறும் – காலமெல்லாம், வாழியே – வாழ வேண்டும்.

**சிறப்புரை**

*(அத்திகிரி அருளாளர் அடிபணிந்தோன் வாழியே)*

இந்திரனுடைய யானையான ஐராவதம் நெடு நாள் தவம் செய்து மலை வடிவம் கொண்டு எம்பெருமானைத் தரித்ததால் காஞ்சீபுரத்தில் தேவ ராஜன் எழுந்தருளியிருக்கும் அம்மலைக்கு ஹஸ்திகிரி எனப் பெயர் வந்தது. தமிழில் அத்திகிரி ஆயிற்று. அருளாளர் – தேவப்பெருமாள். அவர் அடி பணிந்தவர் இராமானுசர். அவரை அடி பணிந்தவர் முதலி

ஆண்டான். ஆகையால் அடிபணிந்தோன் என்றபடி. அப்படிப்பட்ட ஆண்டான் பல்லாண்டு வாழ வேண்டும்.

*(அருட்பச்சை வாரணத்தில் அவதரித்தான்)* பஞ்சபாண்டவர்களில் முதல்வனான தருமன் யாகம் செய்யும் போது துஷ்டர்கள் அதனைச் செய்ய விடாமல் தடுத்தனர். அப்போது கண்ணன் பச்சை நிற யானை வடிவம் கொண்டு துஷ்டர்களை விரட்டினார் என்று மகாபாரதக் கதை. அதனால் அந்த ஊருக்கு பச்சை வாரணப் பெருமாள் கோயில் என்று வழங்கப்படுகிறது. மேலும், புருஷமங்கலம் என்கிற பெயருமுடைய திவ்யதேசமாகும். அங்குள்ள பெருமாள் ஒரு விரலை மடக்கி நம்மை அழைத்து அருள் செய்பவராகையாலே அருட்பச்சை வாரணப் பெருமாள் என்று அழைப்பர்.

*(சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன்)* தமிழ் மாதங்களிலே முதல் மாதம் சித்திரை ஆகும். இராமபிரான் சித்திரை மாதம் புனர்வஸு நக்ஷத்ரத்தில் பிறந்தார். இராமபிரானுக்கு பட்டாபிஷேகம் செய்வதற்காகக் குறித்த மாதமும் சித்திரை. இது பற்றியே தசரதன் ***''சைத்ரஸ்ரீமாந் அயம் மாஸ:''*** என்கிறபடியே இந்த சித்திரை மாதமானது மிகச் சிறந்தது என்கிறார். அப்படிப்பட்ட மாதத்தில் அவதரித்தவர் இராமாநுசரும் முதலியாண்டானும் ஆவர். அநந்த நாராயண தீக்ஷிதர் தர்ம ஆசாரப்படி இல்லறம் நடத்தி வருகையில் பிள்ளை வரம் வேண்டி திருமலைக்குச் செல்ல நினைத்தனர்.

அன்று இரவு திருவரங்கன் அவர் கனவிலே தோன்றி நாமே உமக்கு மகனாகப் பிறப்போம். பிள்ளை வேண்டி திருமலைக்குப் போக வேண்டாம். நமது ஆதிசேஷனே ஸ்ரீபெரும்பூதூரில் இளையாழ்வாராக அவதரித்துள்ளார். நாமும் உமக்கு பிள்ளையாக அவதரித்து அவரை அடுத்து உலகுய்ய வழிகோலுவோம் என்று நியமித்தான். இப்படி கனவு கண்டதை நினைத்து இத்தம்பதிகள் குதூகலம் அடைந்தனர். அவ்வாறே நாராயண தீக்ஷிதரின் மனைவியின் கர்ப்பத்தை பன்னிரு மாதம் அலங்கரித்து, ஸ்ரீமுக வருடம் சித்திரை மாதம் புநர்வசு அன்று இராமனே பிள்ளையாக அவதரித்தார். இப்படி பகவத் ஸம்பந்தம் உடைய நக்ஷத்ரத்தில் அவதரித்தவர் ஆண்டான். ***''அதிதி: தேவதா யஸ்ய தத் தஸ்மாத் நக்ஷத்ரே புநர்வஸ்வோ''*** என்கிறபடியே புனர்வஸு நக்ஷத்ரம் அதிதி தேவதா என்கிறது வேதம். இந்த புனர்வஸு நக்ஷத்ரம் குலசேகராழ்வாரும், எம்பாரும்

> திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் திருமலையில் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அனைவரையும் "கோவிந்தா" என்றே அழையுங்கள். இல்லங்களிலும் "கோவிந்த நாம" பாராயணம் செய்தல் நன்று.

அவதரித்த பெருமை உடையதாகும். அப்படிப்பட்ட நக்ஷத்ரம் சிறக்க வந்து அவதரித்த ஆண்டான் வாழ வேண்டும்.

*(சீபாடியமீடுமுதல் சீர் பெறுவோன் வாழியே)* உடையவர் கூரத்தாழ்வான், முதலி ஆண்டான், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் இவர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் அருளினார் என்று இராமாநுஜ திவ்ய சரிதை கூறும். அதனால் சீர்மை பெற்றவர் முதலி ஆண்டான். அவ்வாறே பகவத் விஷயத்தில் – திருவாய்மொழி 5–6–7, 6–7–5, 8–8–8, 8–10–3 முதலான பாசுரங்களில் முதலியாண்டான் நிர்வாகம் சீர்மை பெற்றது காணலாம். அப்படிப்பட்ட முதலியாண்டான் பல்லாண்டு வாழ்க.

*(உத்தமமாம் வாதூலம் உயர வந்தோன் வாழியே)* வாதூல கோத்ரத்துக்கு மேன்மை ஆவது முதலியாண்டான் அவதரித்ததேயாகும். இக்குலம் உயர்வதற்கு அவர் திருக்குமாரர் கந்தாடை ஆண்டான், அவர் திருக்குமாரர் கந்தாடை தோழப்பர், அவர் திருக்குமாரர் ஈயான் ராமாநுஜர், அவர் திருக்குமாரர் திருக்கோபுரத்து நாயனார், அவருடைய மூன்றாவது திருக்குமாரர் தெய்வங்கள் பெருமாள் தோழப்பர், அவருடைய மூன்றாவது குமாரரான தேவராஜ தோழப்பர், நம்பெருமாள் அருளால் அவருடைய மூன்றாவது திருக்குமாரரான முதலியாண்டான் அம்சமான வராய் இருக்கும் வரத நாராயண குரு, இவரே கோவில் கந்தாடை வாதூல தேசிக அண்ணன் ஸ்வாமி மற்றும் இன்று வரை உள்ள ஆசார்யர்கள் மூலம் வாதூலம் இன்றும் உயர்ந்து வருவது காணலாம். இவர்களுள் கந்தாடை அண்ணன் ஸ்வாமி மணவாளமாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவராவர். இவ்வாறு வாதூலம் உயர வந்த முதலியாண்டானுக்கு பல்லாண்டு பாடுவோமாக.

*முதலியாண்டான் வாழித்திருநாம உரை தொடரும்...*

# குலசேகர ஆழ்வாரின் ராம பக்தி

– திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர்,
99627 88065



“கற்பார் ராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ” என்ற கேள்வியை எழுப்பினார் சுவாமி நம்மாழ்வார். “தலைவர் எவ்வழி சீடன் அவ்வழி” என்பதற்கு ஏற்ப குலசேகர ஆழ்வார் ஸ்ரீமத்ராமாயணம் கற்பதிலும், கேட்பதிலும் ஆர்வம் உள்ளவராக விளங்கினார். இராம அவதாரத்தில்தான் தன்னுடன் சம்பந்தம் பெற்ற அயோத்தியா முழுவதையும் அசைவன, அசையாதன, உயிர் உள்ளன, உயிரற்றன, அறிவு உள்ளன, அறிவில்லாதன என எல்லோரையும், எல்லாவற்றையும் (சித்,அசித்) ஸ்ரீ வைகுண்டம் கூட்டி சென்ற பெருமை, நற்கதி அடைவித்த பெருமை. இறையருள் பெற வேண்டுபவன் இராமபிரான் அல்லாது வேறு எந்த தெய்வத்தையும் கற்பதில் பயனில்லை என்பது நம்மாழ்வார் கருத்து. **“நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றமும் நற்பாலுக்கு உய்த்தவன்”** சரிதத்தைக் கேட்பதில் ஊக்கமுடையவராய்த் திகழ்ந்தார் குலசேகர ஆழ்வார்.



சேர, சோழ, பாண்டிய நாடுகளை வென்று, ஒருங்கிணைத்து தனி பேரரசனாய் சக்கரவர்த்தியாய்த் திகழ்ந்தவர் குலசேகர மன்னர். ஒப்பற்ற தெய்வம் யார் என்பதை ஆய்வு செய்து **“சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்”** என்பதில் மகாவிச்வாசம் உடையவர். திருமால் மீது நீங்கா பக்தி வைத்திருந்த ஸ்ரீ வைஷ்ணவனான திடவிரதனுக்கு புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்த குலசேகரன் அதே புனர்பூச நட்சத்திரத்தில் அவதரித்த சக்கரவர்த்தித் திருமகன், ரகுகுல வம்சத் திலகம், அவதார புருஷனிடம் மீளாத பக்தி வைத்து இருந்தான். ஸ்ரீமத்ராமாயணம் ஸ்காலக்ஷேபம் கேட்பதில் விருப்பம் கொண்டான்.

***அங்கணெடு மதிள் புடைசூழ் அயோத்தி என்னும்***
***அணி நகரத்து உலக அனைத்தும் விளக்கும் சோதி***
***வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்த் தோன்றி***
***விண் முழுதும் உயக் கொண்ட வீரன் தன்னை*** – பெருமாள் திருமொழி 10–1

ஒரு பௌராணிகர் மூலம் இராமாயணம் கேட்டு மகிழ்ந்தார். தடவரைத் தோள் தசரதன் தன் செல்வனாகத் தோன்றியதும், வசிஷ்டரிடம் கலைகள் யாவும் கற்றனவும், மறை முனிவர் விஷ்வாமித்திரருடன் வனம் சென்றதும், வந்து எதிர்த்த தாடகை தன் உரத்தைக் கீறி, அவளை அழித்ததும், முனிவரின் வேள்வியைக் காப்பாற்றியதும் கேட்டு மகிழ்ந்தார்.

சூர்ப்பனகை படலம் வந்தது. மூக்கறுக்கப்பட்ட சூர்ப்பனகை கரனிடம் சென்று நடந்ததைக் கூறினாள். கரன் என்னும் அரக்கன் இராம லக்ஷ்மணர்களை எதிர்த்துப் போராட வந்தான் என்று பௌராணிகர் சொன்னவுடனே குலசேகர மன்னர் உணர்ச்சி



## திருமலையில் பிளாஸ்டிக் பொருட்கள் தடை



புண்ணிய திருத்தலமாம் திருமலையின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி செய்ய வேண்டும். இதனை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்தர தடை விதித்துள்ளது.

எனவே, பக்தர்களும் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். துணிப்பைகளையும், பிளாஷ்டிக் அல்லாத குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழங்கும் ஜலப்பிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலையின் சுற்றுபுறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடமையாகும்.

வசப்பட்டு படைகளைத் திரட்டி, ஸ்ரீராமனுக்கு உதவி செய்யத் தாமும் தேர் மீது ஏறிச் சென்றார். அரசனின் மனநிலை உணர்ந்த அமைச்சர்கள் கரண், தூடணன், திரிசரன் வீழ்த்தப்பட்டார்கள் என்றும், அரக்கர்சேனை சின்னாபின்னமாகி விட்டது என்றும் அறிவித்த பிறகு குலசேகரன் அரண்மனை திரும்பினார்.

ஸ்ரீ வைஷ்ணவ பாகவதர்கள் மீது நம்பிக்கை உடையவர். தன் குமாரனுக்கு முடிச்சூட்டி திருவரங்கம் வந்து பெரிய பெருமாளுக்கும் பாகவதர்களுக்கும் கைங்கரியம் செய்து வாழ்ந்தார். குலசேகர ஆழ்வார் என்றழைக்கப்பட்டார். பெரிய பெருமாள் ஸ்ரீராமனிடம் பேரன்பு உடையவர். ஆகவே குலசேகரப் பெருமாள் என்று கொண்டாடப்பட்டார். இவர் அருளிய திவ்ய பிரபந்தத்திற்கும் பெருமாள் திருமொழி என்று பெரியவர் பெயரிட்டனர். கௌசல்யா தேவி குழந்தையைச் சீராட்டி, பாலூட்டி, தாலாட்டி வளர்த்ததை குலசேகரப் பெருமாள் பக்தி பரவசத்துடன் அனுபவிக்கிறார்.

*மன்னு புகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே*
*தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய் செம்போன்சேர்*
*கன்னி நன் மாமதிள் புடைசூழ் கணபுரத்தென் கருமணியே!*
*என்னுடைய இன்னமுதே! ராகவனே! தாலேலோ*

திருக்கண்ணபுரத்து திவ்யதேச சௌந்தரராஜ பெருமாளை ஸ்ரீராமனாக அனுபவிக்கிறார்.

*"எண்திசையும்ஆளுடையாய்!ராகவனே! தாலேலோ"*
*"எங்கள்குலத்து இன்னமுதே!ராகவனே! தாலேலோ"*
*"ஏமருவும் சில்வளவா! ராகவனே! தாலேலோ"*
*"தாராளும் நீண் மூடி என் தாசரதி! தாலேலோ"*
*"சிற்றவை தன் சொற் கொண்ட சீராமா! தாலேலோ"*
*"ஆலிநகருக்கு அதிபதியே! அயோத்தியனே! தாலேலோ"*
*"சிலை வளவா கேசவனே! சீராமா! தாலேலோ*
*"இளையவர்க்கு அருளுடையாய்! ராகவனே! தாலேலோ"*
*"ஏவரிவெஞ்சிலை வலவா ராகவனே! தாலேலோ"*

தாய்மையைச் சிறப்பிக்கும் பாசுரங்கள் இவை. ஸ்ரீ ராம சரித்திரம் முழுவதும் அனுபவித்து தாலாட்டுப் பாடுகிறார். விடிந்தால் மாமன்னனாக பட்டம் சூட இருந்த ஸ்ரீராமன் தன்னைப் பிரிந்து வனம் சென்றான் என்ற செய்தியைக் கேட்க இயலாத தசரத சக்கரவர்த்தி ஸ்ரீராமனின் பிரிவைத் தாங்க முடியாமல் நொந்து பேசும் பாசுரங்கள் அனுபவிக்கத்தக்கவை.

*''எம் ராமாவோ! உனைப் பயந்த கைகேசி தன் சொற்கேட்டு நன்றாக நாநிலத்தை ஆள் விததேன் நன் மகனே! உன்னை நானே''* நினைத்தாலும், பெயரைச் சொன்னாலும், கண்ணால் கண்டாலும் எல்லா துன்பங்களும் போய்விடுமாம். இராம நாமத்தின் பெருமை இப்படி இன்புறச் செய்யும் உன்னை அல்லவோ வனம் போகச் சொல்லி விட்டாள்.

நான் இப்படிச் செய்தபோதிலும் தாய் தந்தையர் சொன்ன வார்த்தைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்கிற தர்மவான் நீ என்று இராமனைப் புகழ்கிறார். எல்லா செல்வத்தையும் விட்டுவிட்டு சீதா பிராட்டியும், இளையபெருமாள் லக்ஷ்மணனும் பின் தொடர, கொடுமையான கடுமையான காட்டிலே நீ எப்படி நடந்தாய் என்று தசரதன் புலம்பல் படிக்கும் நம்மையும் புலம்ப வைக்கிறது.

*''எவ்வாறு நடந்தனை? என் ராமாவோ! எம்பெருமான் என் செய்கேனே''* என்று தசரதன் புலம்புகிறார். ராஜ குடும்பத்தில் அரண்மனைக்குள் பிறந்தவன் காட்டில் துன்புறுவதா? குடிபிறப்புக்கும் பொருந்தாது. உன் திருமேனி அழகுக்கும் பொருந்தாது என்று புலம்புகிறார்.

இறுதியில் ஸ்ரீ ராம அவதாரம் தொடங்கி, இராமன் தன் இருப்பிடமான ஸ்ரீவைகுண்டம் செல்வது வரை அவதாரச் செயல்களைப் பற்றிப் பட்டியலிடும் அழகே அழகு. வால்மீகி பகவானைப் போலவே தன் ஞானத் தெளிவால் பேசி அனுபவிக்கும் அழகே அழகு. *''எங்கள் தனி முதல்வனை எம்பெருமான் தன்னை என்று கொலோ கண்குளிரக் காணும் நாளே''* என்று ஸ்ரீ ராமனின் வடிவழகிலும், எளிமை குணத்திலும் ஈடுபட்டு துதிப்பவர்களுடைய திருவடிகளையே நான் துதிப்பேன் என்று பாடுவது குலசேகரப் பெருமாளின் ராம பக்தியை நம் கண் முன்னே நிறுத்துகிறது.

*''அரசமர்ந்தான் அடிசூடும் அரசை அல்லால் அரசாக என்னேன் மற்றரசு தானே''* அயோத்தி அரசாண்ட ஸ்ரீ ராமனுடைய திருவடிகளைத் தங்கள் தலைகளிலே சூடும் அரசைத் தவிர மற்றவர்களை ஓர் அரசராக நான் எண்ண மாட்டேன் என்பது ஸ்ரீராமனின் பெருமையை உலகுக்கு உணர்த்துகிறது. ஆகவே ஸ்ரீ ராம சரித்திரத்தை செவியால் கண்ணால் பருகி இன்னமுதும் அனுபவிப்போம் வாரீர்.

## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்



65. காஞ்சி நகராதீரனான வரதராஜப்பெருமாள் திருக்கச்சி நம்பிகளுடன் பேசின ஆறு வார்த்தைகள் யாவை?

இளையாழ்வார் விஷயமாக திருக்கச்சி நம்பியுடன் தேவராஜஸ்வாமி பேசின ஆறு வார்த்தைகள் 1. பரதத்வம் நானே, 2. ஜீவேச்வர பேதம் நித்யம். 3. சரணாகதியே உஜ்ஜீவனத்துக்கு ஸுலபமான உபாயம், 4. ப்ரபந்நனுக்கு அந்திமஸ்ம்ருதி தேவை இல்லை, 5. சரணாகதி செய்தவனுக்கு சரீர முடிவில் மோக்ஷம், 6. பெரிய நம்பி திருவடிகளை ஆச்ரயிக்கவும்.

66. சாந்தோக்ய உபநிடதத்தில் தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ என்ற ஸூத்ரத்துக்கு ஸ்ரீபாஷ்யகாரர் அநுக்ரஹித்த பாஷ்யம் என்ன?

கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸும்ருஷ்டநாளர விகரவிகஸிதபுண்டரீகதள அமலாயதேக்ஷண:

(மிகவும் ஆழமான குளத்தில் தோன்றிய பருத்த தண்டுடன் கூடிய ஸூரிய கிரணங்களால் மலர்விக்கப்பட்ட தாமரை போன்ற திருக்கண்கள் உடையவன் எம்பெருமான்).

67. ப்ரமாதி, பிங்கள, ஸாதாரண ஆகிய பெயருடைய ஸம்வத்ஸரத்தில் அவதரித்த ஆழ்வாராசார்யர்கள் யார்?

ப்ரமாதி – சடகோபர், பிங்கள ஸ்ரீராமாநுசர், ஸாதாரண மணவாளமாமுனிகள்.

**- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**



# பிப்ரவரி 2026 ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். குழந்தைகள் ஆரோக்கியம் மேம்படும். செலவிற்கு ஏற்ற வருமானம்,தம்பதி இடையே அந்நியோன்யம், ஆரோக்கியம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். வாகனம், வீடு, மனை வாங்கும் யோகம், உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. சுப காரியங்கள் நடக்கும். தைரியமாகக் காரியங்கள் செய்து வெற்றி பெறும் மாதம் இது.

### ரிஷபம்

தொழிலில் எதிர்பார்த்த தனலாபம் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். நண்பர்கள், உறவினர்களால் இருந்த பிரச்சனைகள் தீரும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. தந்தையின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சகல துறைகளிலும் வெற்றி பெற்று சந்தோஷமடையும் இனிய மாதம் இது.

### மிதுனம்

தொழிலில் வேலைப்பளு அதிகமாகும். புதிய முயற்சிகளில் தாமதமாக வெற்றி கிடைக்கும். பெற்றோர்களால் நல்ல அனுகூலம் உண்டு. பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி பேசலாம். உடல் உஷ்ணம் காரணமாக வயிறு உபாதை ஏற்படும். கோபத்தைத் தவிர்க்கவும். மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ பலத்தினால் எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம்.

### கடகம்

குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் மற்றவர்களுடன் பேசும் போது விவாதத்தைத் தவிர்க்கவும். குடும்ப ஆரோக்கியத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. தம்பதியிடையே சிறு ஊடல்கள் ஏற்பட்டு சரியாகும். வீட்டின் மின் சாதனப் பெட்டிகள் பழுதடையும். மாணவர்கள் கடுமையாக உழைத்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறுவர். எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம்.

### சிம்மம்

பழைய பாக்கிகள் வசூலாகும்.தம்பதியிடையே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். கடும் முயற்சியின் பேரில் சுப காரியங்கள் நடக்கும். மூட்டுவலிக்குத் தக்க மருத்துவம் கிடைக்கும். உடல் உஷ்ணம் அடையும். கடன் வாங்கி வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. கடும் முயற்சியின் பேரில் மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நிதானமாக முன்னேறும் மாதம் இது.

### கன்னி

புதிய முயற்சிகளுக்குத் தாமதமாக வெற்றி கிடைக்கும். உடல் உஷ்ணம், அஜீரணக் கோளாறு உண்டாகும். தொழில் போட்டி கடுமையாக இருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். திருஷ்டியினால் வேலைகளும் தாமதமாகும். செலவுகளுக்கு ஏற்ற வருமானம் பெறுவதில் சிக்கல் இருக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.

### துலாம்

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். தொழில் போட்டியில் வெற்றி கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். கடன் வாங்கி வீடு, மனை, புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. மகிழ்ச்சியால் வெற்றி பெறும் மாதம் இது.

### விருச்சிகம்

பண விஷயத்தில் மிகுந்த அக்கறை தேவை. வயிறு உபாதை உண்டு. தொழிலில் கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். தொழிலில் அலைச்சல் உண்டாகும். உஷ்ணம் காரணமாக உடல் நலிவு உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றம் உண்டு. மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய மாதம் இது.

### தனுசு

வீடு, நிலம், புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். சகோதரர்களுக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். பெற்றோரின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தம்பதியிடையே இருந்த பிரச்சனைகள் நீங்கும். திட தேக ஆரோக்கியம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ அருளால் முன்னேறும் மாதம் இது.

### மகரம்

தொழிலில் புதிய முயற்சிகள் செய்யலாம். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் உண்டு. உடல் உஷ்ணம் காரணமாக மருத்துவ செலவு உண்டாகும். புதிய முயற்சிகளுக்குத் தாமதமாக வெற்றி கிடைக்கும். மாணவர்கள் கஷ்டப்பட்டு படித்து சுமாரான மதிப்பெண் பெறுவர். தொழில் அலைச்சலினால் தூக்கம் குறையும். மிகுந்த எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம்.

### கும்பம்

திடீர் தன வரவு உண்டு. பழைய பாக்கிகள் வசூல் ஆகும். குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. குடும்ப ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டு. மனச் சஞ்சலங்கள் உண்டு. தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். படித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும் மாதம்.

### மீனம்

வேலைப்பளு காரணமாக உடல் வலிகள் உண்டாகும். நண்பர்கள் உறவினர்கள் உதவி கிடைக்கும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. ஜாதகத்தில் உள்ள தோஷங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டிய மாதம் இது. பழைய பாக்கிகள் வசூல் ஆகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் உண்டு. பலவிதத்திலும் நன்கு முன்னேறும் மாதம் இது.

செல்வந்தர் ஒருவரிடம் யாசகம் செய்தான் ஒருவன், உழைத்துச் சாப்பிடாமல், ஏன் யாசகம் செய்கிறாய்? என்று கேட்டார் அவர். ஐயா! எனக்கு திடீரென்று வேலை போய்விட்டது. வேறு வேலைக்கு எங்கு கேட்டுப் பார்த்தும், வேலை கிடைக்காததால் இந்த முடிவுக்கு வந்தேன். உங்களைப் பார்த்தால் பெரிய மனிதர் போலத் தெரிகிறது. எனக்கு ஏதாவது வேலை வாங்கிக் கொடுத்தால், யாசகம் பெறுவதை விட்டு விடுகிறேன் என்றான். அவனை ஆழமாகப் பார்த்த செல்வந்தர், நான் ஒன்று சொன்னால் சந்தோஷமாகச் செய்வாயா? என்று கேட்டார். என்ன செய்ய வேண்டும்? என்றான் அவன்.

எனக்குப் பெரிய விவசாயப் பண்ணை இருக்கிறது. அங்கு விளையும் பொருட்களை விற்பதற்காக நகரில் கடை வைக்கலாம் என நினைக்கிறேன். அந்தக் கடையை நீ பார்த்துக்கொள், சம்பளத்திற்குப் பதிலாக லாபத்தில் பங்கு தருகிறேன். நீ அங்கே முதலாளி போல இருக்கலாம் என்று கேட்டார் செல்வந்தர். சட்டென அவர் காலில் விழுந்துவிட்டான் பிச்சைக்காரன். எல்லாரும் எனக்கு காசு தான் பிச்சை போட்டார்கள். நீங்கள் எனக்கு வாழ்க்கையையே பிச்சை போட்டிருக்கிறீர்கள், என் தெய்வம் நீங்கள்தான் என்றான். செலவுகள் போகக் கிடைக்கும் லாபத்தில் 90 சதவிகிதம் நீ எடுத்துக்கொள். எனக்கு வெறும் 10 சதவிகிதம் போதும். இதைக் கூட நான் கொடுக்கச் சொல்வது, உனக்கு என்றைக்கும் நன்றியுணர்வு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் என்றார் செல்வந்தர். வியாபாரம் தொடங்கியது.


பக்திக் கதை

# நன்றி செலுத்த வேண்டும்!

– திரு.எஸ்.இராமதாஸ்,
புதுச்சேரி, 99768 89162.


செல்வந்தரின் பண்ணையில் விளையும் பொருட்கள் தரமானவை என்பதால், மக்கள் தேடி வந்தார்கள். பிச்சைக்காரனிடம் செல்வம் குவிய ஆரம்பித்தது, லாபத்தைச் சரியாகக் கணக்குப் போட்டு 10 சதவிகிதத்தைச் செல்வந்தருக்குக் கொடுத்து வந்தான் அவன்.

சில நாட்களில் அவன் தோற்றம் மாறியது. வீடு, வாகனம், விலையுயர்ந்த ஆடைகள் என வாங்கினான். ஒரு கட்டத்தில் அவனுக்குள் பேராசை புகுந்தது. தனக்கு இந்த வாழ்க்கையை அளித்த அந்த வள்ளலை மறந்தான். அவர் கடைக்கே வருவதில்லையே. நான்தான் உழைக்கிறேன், அவருக்கு எதற்கு லாபத்தில் பங்கு? என்று யோசித்தான். அவருக்குப் பணம் தருவதை நிறுத்தினான். கொஞ்ச நாள் கழித்து அந்தச் செல்வந்தர் தன் பங்கைப் பெற வந்தார். உழைப்பு எல்லாம் என்னுடையது. உங்களுக்கு ஏன் நான் லாபத்தில் பங்கு தர வேண்டும்? என்று கேட்டான்.

இது அநியாயம் இல்லையா? எனக்கொதிக்கும் பலரும் இதே தவறைத்தான் செய்கிறார்கள். இறைவன்தான் அந்தச் செல்வந்தர். மனிதர்கள்தான் அந்தத் தவறு செய்தவர்கள். இறைவன் நமக்குப் பிச்சை போட்டது இந்த வாழ்க்கையை. இதில் பலன்பெறும் நாம், இறைவனுக்கு நன்றி சொல்லும்விதமாக அதில் கொஞ்ச நேரத்தைப் பிரார்த்தனைக்காகவும், சமூகத்துக்காகவும் செலவிட வேண்டும் என எதிர்பார்க்கிறான். சக மனிதர்களுக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள சில விஷயங்களை யாவது செய்வதே இறைப்பணி. அதைச் செய்து, எல்லாம் அளித்த இறைவனுக்கு நாம் நன்றியுடன் இருக்கிறோம் என்று காட்ட வேண்டும்.

# பல்சுவைப் பகுதி

## எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்





## சித்திரத்தைப் பாருங்கள் !!


## வண்ணம் தீட்டுங்கள் !!



## பாதையைக் கண்டுபிடி!

சிலந்தி, பாம்பு, யானை கீழே காணப்படுகின்றன. இந்த உயிரனங்கள் மேலே தரிசனமளிக்கும் காளஹஸ்தீஸ்வரரைச் சென்று அடைய பாதையைக் காட்டி உதவிடுங்கள்!!





இங்கு காணப்படும் உடுக்கைகளில் சில இடம்மாறி உள்ளன. வலம், இடம் என எத்தனை உடுக்கைகள் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

விடை :

வலப்புறம் :04 ; இடபுறம் : 08






திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண் - 42

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. திருக்கச்சி நம்பிகளுக்கு பெற்றோர் இட்ட திருநாமம்.............................................
2. இளையாழ்வார் என்று போற்றப்படும் ஆசாரியர்.............................................
3. அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி என்று சிவ பெருமானைக்கூறியவர் .............................................
4. முதலியாண்டான் யாருடைய அம்சமாக அவதரித்தார்.............................................
5. திருவேங்கடமுடையானுக்கு மிக உகந்த கைங்கர்யம் .............................................
6. உலக பரிணாம வளர்ச்சியைக் கூறிய சைவ சமயக் குரவர் .............................................
7. வள்ளலார் அருளிச் செய்த பாடல்களின் தொகுப்பு .............................................
8. தேவராஜ அஷ்டகம் அருளிச் செய்தவர்.............................................
9. முதலியாண்டான் அவதரித்த திருநட்சத்திரம்.............................................
10. இராமாநுஜரை யாதவ பிரகாசரிடமிருந்து தப்பிக்க உதவியவர்.............................................
11. இராமபிரானை தமது பாசுரங்களால் தாலாட்டு பாடியவர்.............................................
12. பரதனுக்கு அடியாராக விளங்கியவர் .............................................
13. நவ நரசிம்மர்கள் அருள்புரியும் திவ்யதேசம்.............................................
14. இராமாநுஜரின் நிழல் என்று அழைக்கப்பட்டவர்.............................................
15. தேவராஜ மங்களம் எனும் ஸ்தோத்திரத்தினை அருளிச் செய்தவர்.............................................




## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.02.2026. **விடையை எழுதுங்கள்!**

**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |




சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!



## விடைகள்

1) நடராஜர், 2)மகாதேவர், 3) நீலகண்டன், 4) நாகபூஷணர்,
5) கங்காதரன், 6) பசுபதி, 7) ருத்திரர், 8) சங்கரன்.




இங்கு புத்தகத்தில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான எழுதுகோல்களின் எண்ணிக்கை உள்ள விடையைப் பொருத்துக

**கணித விளையாட்டு**




1) vi 2) iii, 3) ii, 4) i, 5) iv



*சிவ பெருமானின் வாகனமாகவும், கைலாயத்தின் வாயிற் காப்பாளனாகவும் நான் விளங்குகிறேன். என்னைக் கடந்து சென்றுதான் சிவ பெருமானைத் தரிசிக்க வேண்டும். சைவ சமயத்தின் முதல் குருவாகவும் நான் திகழ்கிறேன். துன்பத்தை விலக்கி இன்பத்தை அளிப்பவர் என்றும் என்னுடைய பெயருக்கு பொருள் கூறுவர். பக்தர்களும் காளை வடிவில் அவதரித்து உலா வரும் என்னையும் வணங்குவர். திருவிழாக்காலங்களில் சிவ பெருமானை என் திருமேனி மீது எழுந்தருளச் செய்வர்.*

*மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...*

விடை : நந்தி

விடைகள்



சித்திரக் கதை

# தாய்க்கு தலை வணங்கு!

தெலுங்கில் : கலாரத்னா டாக்டர் கே.ரவிச்சந்திரன்
சித்திரம் : திரு. து. சிவாஜி.




நாம் அனைவரும் பெஜ்ஜ மகாதேவி இல்லத்திற்குச் செல்வோம். அனைவரும் பரமசிவனை வணங்கி அவர் இயல்பு நிலைக்கு வரும் வரை பஞ்சாட்சரத்தைத் துதிப்போம்.
நாம் அனைவரும் இஷ்ட லிங்கத்தை வழிபட்டு அப்பரமேஸ்வரரைப் போற்றியபடி துதித்து இங்கிருந்தே புறப்படுவோம்.
பெஜ்ஜ மகா தேவியும் கூட எப்பணியைச் செய்தாலும் பஞ்சாட்சரத்தை உச்சரிப்பவள். உறக்கத்திலும் உச்சரித்துக் கொண்டே இருப்பாள். அவள் பரமேஸ்வரரின் அருள் பெற்றவள். ஆதலால்தான் தொடர்ந்து சிவ தியானத்தில் இருக்கின்றாள்.
அனைவரும் “ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய” என சிவ நாமத்தை உச்சரித்தபடி பெஜ்ஜ மகாதேவி இல்லத்தை அடைந்தனர்.
மகனே! இத்துன்பத்தை என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. உனக்காக என் உயிரையும் தருவேன்.
பெஜ்ஜ மகாதேவி! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்.
பரமேஸ்வரா! தாங்கள் எந்த நோயும் இன்றி ஆரோக்கிய மாக இருந்தாலே போதும்
பக்தர்களே உங்களைப் போன்றவர்களின் தூய மனங்கள் காணிக்கையாக இருந்தால் நாம் எப்படி நோய்வாய்ப்பட முடியும். ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளை கடவுளின் வடிவங்களாகக் கருதி அவர்களை நல்வழிப்படுத்தினால் அனைவரும் நலமாக இருப்பார்கள். பக்தர்கள் ஏதோ ஒரு வகையில் என்னிடம் ஏதாவது கேட்கிறார்கள். ஆனால், பெஜ்ஜ மகாதேவி எந்த கோரிக்கையும் இன்றி ஒரு தாயாகவே என்னை அரவணைத்தாள். என் தாயாக இருந்த இவருக்கு கைலாயத்தில் ஒரு இடம் தயாராக உள்ளது.
பெஜ்ஜ மகாதேவியால் உங்கள் குடும்பத் திற்கே என் இன்னருள் கிட்டியுள்ளது. உங்களின் கர்மா நிறைவடைந்ததுமே நீங்கள் அனைவரும் கைலாயத்தை அடைவீர்கள். இவளின் தாய் அன்பிற்கு மீண்டும் நான் தலை வணங்குகிறேன்.
ஸ்வாமி! பேறு பெற்றோம்!

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*


## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ____________________
   (பெரிய எழுத்துக்களில்) ____________________
   ____________________
   ____________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*


திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

**தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
0877-
2233333
2277777**


- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.


**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.



Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



# திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**08-02-2026 முதல் 16-02-2026 வரை**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 07-02-2026 | சனி | -- | அங்குரார்ப்பணம்<br>மூஷிக வாகனத்தில் ஸ்ரீவிநாயகர் |
| 08-02-2026 | ஞாயிறு | பல்லக்கு உத்ஸவம்,<br>துவஜாரோஹணம் | ஹம்ஸ வாகனம் |
| 09-02-2026 | திங்கள் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 10-02-2026 | செவ்வாய் | பூத வாகனம் | சிம்ம வாகனம் |
| 11-02-2026 | புதன் | மகர வாகனம் | சேஷ வாகனம் |
| 12-02-2026 | வியாழன் | திருச்சி உற்சவம் | அதிகார நந்தி வாகனம் |
| 13-02-2026 | வெள்ளி | வ்யாக்ர வாகனம் | யானை வாகனம் |
| 14-02-2026 | சனி | கல்ப விருக்ஷ வாகனம் | குதிரை வாகனம் |
| 15-02-2026 | ஞாயிறு | திருத்தேர் | நந்தி வாகனம் (மகாசிவராத்திரி) |
| 16-02-2026 | திங்கள் | புருஷாமிருக வாகனம் | கல்யாணோத்ஸவம்<br>திருச்சி உற்சவம் |
| 17-02-2026 | செவ்வாய் | சூரியப்பிரபை வாகனத்தில்<br>நடராஜ ஸ்வாமி திரிசூல ஸ்நானம் | துவஜாவரோஹணம்<br>இராவணாசுர வாகனம் |



# ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மஸ்வாமி பிரம்மோத்ஸவம், தரிகொண்டா

**24-02-2026 முதல் 04-03-2026 வரை**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 23-02-2026 | திங்கள் | -- | அங்குரார்ப்பணம் |
| 24-02-2026 | செவ்வாய் | துவஜாரோஹணம் | -- |
| 28-02-2026 | சனி | -- | கருடசேவை |
| 03-03-2026 | செவ்வாய் | ரதோத்ஸவம், முத்துப்பந்தல் வாகனம் | -- |
| 04-03-2026 | புதன் | தீர்த்தவாரி, அவப்ருதோத்ஸவம்,<br>சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-01-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd. No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.




குலசேகராழ்வார்
திருநட்சத்திரம்
28-02-2026

ஆரம்கெடப்பரளன்பர்
கொள்ளாரென்று அவர்களுக்கே
வாரங்கொடுகுடப்பாம்
பிற்கையிட்டவன் மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோல்
கொல்லிகாவலன் வில்லவர்கோன்
சேரன்குலசேகரன்
முடிவேந்தர் சிகாமணியே

– மணக்கால் நம்பி